
மின்சார வல்லுநர்

# தோமாஸ் ஆல்வா எடிசன்



[கிராமபோன், டெலிபோன், மின்சார விளக்கு, மின்சார வண்டி, தற்காலத் தந்தி, சினிமா முதலிய ஆயிரக்கணக்கான புதுமைகளை முதன் முதல் கண்டுபிடித்தவர்]

ஓம்
திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு கூ } மெய்கண்டான் யாண்டு-எாகூ ஐப்பசித் திங்கள் 1931ஞு அக்டோபர்மூ—நவம்பர்மூ { பரல் ம

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

### திருநீலகண்டம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சோல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோஞ்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெ றுதிரு நீலகண்டம்.

பதவுரை:—

*அவ்வினைக்கு*=முற்பிறப்பில் உள்ளம், நா, உடலாற் செய்த தீவினைகளின் பயனாக

*இவ்வினை ஆம் என்று*=(இப்பிறப்பில் இப்பொழுது நுகரப்படும்) இத் துன்பம் வந்தது என்று

*சொல்லும் அஃது அறிவீர்*=சொல்லுகின்ற வினைச்சட்ட உண்மையை மாத்திரம் நீர் அறிந்துகொண் டிருக்கிறீர்.

*உய்வினை நாடா திருப்பது*=முற்பிறப்பிற் செய்த அந்தத் தீவினைகளின் பயனை இப்பொழுது வராமற் றடுத்து அதனினின்று நீர் பிழைக்கும்படிச் செய்யுஞ் செயல் இன்னது என்று ஆராயாதிருத்தல்

*உம்தமக்கு ஊனம் அன்றே*=அடியார்களாகிய உங்களுக்குக் குறைவு அல்லவா?

நாம் அடியோம்=அடியார்களாகிய நாம்

கைவினை செய்து=கையினாற் செய்யும் வழிபாட்டினைச் செய்து

எம்பிரான் கழல் போற்றுதும்=எமது தலைவனாகிய சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும் வணங்குவோம்;

தீவினை=(அவ்வாறு நாம் வணங்குவோமானால்) நாம் முன் செய்த தீவினைகளின் பயனாகிய துன்பங்கள்

வந்தெம்மைத் தீண்டப்பெறா=வந்து எம்மை அணுகுதற்கு வலியில வாகும்.

திருநீலகண்டம்=அவ்வாறு துன்பங்கள் அணுகாமல் சிவபெருமான் அவைகளினின்று நம்மைக் காப்பர். அடியார்களை இடர் வராமற் சிவபெருமான் காப்பர் என்னும் உண்மையை அவர் முன் கடலி னின்று எழுந்த ஆலகால விடத்தினால் தேவர்களுக்கு வந்த இடரை நீக்க அவ் விடத்தைத் தாமே உண்டு கண்டம் நீல நிற மான செய்தியிலிருந்து அறிந்துகொண்டு நாம் அந்த நீலகண்டத் தைச் சிந்தித்து அந்த நாமத்தை உரைப்போம்.

விளக்கவுரை:—

திருஞானசம்பந்த சுவாமிகள் கொங்கு நாட்டிலுள்ள திருக் கொடி மாடச் செங்குன்றூரில் அடியார்களுடன் தங்கி யிருந்தபொழுது அடியார்கள் பனிக்காலத்தில் சுரத்தினால் வருந்தினர். அவர்கள் தாங் கள் சுரத்தினால் உடல் வருந்துவதை சுவாமிகளிடம் தெரிவித்த பொழுது சுவாமிகள் இப்பாட்டு முதலாயுள்ள தேவாரப் பதிகத்தை அருளிச்செய்தனர். இப் பாட்டின் முதல் இரண்டு அடியும் சுவாமிகள் அடியார்களை நோக்கிக்கூறினார். பின் இரண்டு அடிகளும் அவர்களைத் தம்முடன்சேர்த்து உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கூறு கின்றார்.

அவ்வினை—அகரம் சேய்மையிலிருக்கும் பொருளைக் குறிக்கிறது. இங்கே முற்பிறப்பிற் செய்த என்னும் பொருளைத் தருகிறது. வினை என் பது உள்ளம் நா உடல்களாற் செய்யப்பட்ட தீவினையைக் குறிக் கின்றது; நல்வினை துன்பம் பயவாது ஆதலின்.

இவ்வினை—இகரம் அண்மையிலிருக்கிற பொருளைக் குறிக்கும். அது இங்கே இப்பொழுது நுகரப்படும் என்ற பொருளில் வருகிறது. வினை என்பது இங்கு ஆகுபெயராய் வினையின் பயனாகிய துன்பத் தைக் குறிக்கின்றது.

அஃது என்னும் சுட்டுப்பெயர் இங்கே நூலிலே கூறப்பட்ட வினைச் சட்ட உண்மையைச் சுட்டி நிற்கின்றது.

உய்வினை—துன்பத்தினின்று நீங்கிப் பிழைக்கும் சூழ்ச்சி. வினை என்பது இங்கே சூழ்ச்சி (உபாயம்) யைக் குறிக்கின்றது. என்ன செய்தால் முன்செய்த தீவினையின் பயன் தடுக்கப்படும் என்று செய்கிற சூழ்ச்சி.

நாடாதிருப்பது—தீவினைத் தீர்வுக்கு வேண்டிய சூழ்ச்சியை முன்பு ஆராய்ந்து அறிந்து பின்பு செய்யப்படுவதாகலின் நாடாதிருப்பது என்றார்.

உந்தமக்கு—உமக்கு; தம் சாரியை.

ஊனம் என்பது குறைவு; குற்றமும் ஆகும்.

கைவினை—கையினாற் செய்யும் வழிபாடு. அது சிவபெருமான் திருவடிகளிற் பூக்கள் இடுதல். "ஒருமொழி யொழி தன்னினங் கொளற்குரித்தே" என்னும் சூத்திர விதியால் அது மனதினால் நினைத்தலையும், வாக்கினால் வழுத்தலையும் உடனாகக் குறிக்கும்.

மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி

என்பது சிவஞானசித்தியார்.

செய்வினை—வினைத்தொகை—வினையின் பயனைக் குறிக்கிறது.

தீண்டப்பெறா—வினை பால்பகா அஃறிணைப் பெயர் ஆதலின் பன்மை வினை கொண்டது.

திருநீலகண்டம்—திருநீலகண்ட உருவத்தை நினைப்போம் கூறுவோம் என்னும் பொருள்பட நின்றது.

இந்தப் பாட்டானது வினை என்பது தலைவிதி (fatalism) அன்று என்றும், ஒருவருக்கு முன் செய்த தீவினையின் பயனாகத் துன்பம் வந்தக்கால் அவர் அதனினின்றும் விலகி உய்யும் பொருட்டுச் சிவபெருமானை உள்ளம் மொழி மெய்களால் வழிபடல் வேண்டும் என்றும் கூறுகிறது; "உலையா முயற்சி களைகணா ஊழின் வலி சிந்தும் வன்மையும் உண்டு" என்னும் உண்மையைக் கூறுகிறது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

# திருவாசகமும் பரஞ்சோதி முனிவரும்

[திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள்]

(௨௨௰-ம் பக்கத் தொடர்ச்சி.)

## (க) அழுதல் ஒரு சாதனமா?

இப்பகுதியை நாம் ஆராய்வதற்கு முன்னரே இங்கு அறிந்து கொள்ள வேண்டியது ஒன்று. அது, 'உலகியலில் எவ்வெவ் வுயிர்கள் நேரிய எவ்வெவ் வழிகளால் தாந்தாம் விரும்பியவற் றைப் பெறுகின்றனவோ, அவ்வவ்வழிகளெல்லாம் இறைவன் திருவடிப் பேற்றுக்கும் உரியனவாகுமெனக் கருதுவது அவ் வடிப் பேற்றுக்கு அன்பு நெறியிற் செல்லும் பெரியோர்களின் இயல்பு என்பதாகும். இவ்வுண்மையை அவர்கள் அருளிச் செய்த நூல்களிற் பரக்கக் காணலாம்.

உலகினரிற் பெரும்பாலோர் மேற்கொண் டொழுகும் இல் லறத்திற்கு மங்கலமாகிய மாண்பமைந்த மனைக்கிழத்தியும், அதன் நன்கலமாகிய நன்மக்களும் தாம் விரும்பியவற்றைப் பெறுதற்கு மேற்கொண் டொழுகும் பல வழிகளில் அழுதல் ஒரு தலைசிறந்த வழி என்பதைப் பல விடங்களிற் கண்கூடாகக் காண்கின்றோம்.

இங்ஙனம் நமது உயிர்ச் சார்பாயுள்ள பொருள்களுட் சிறந்த மனைவியும் மக்களும் அழுதலை ஒரு சாதனமாகக் கொண்டு தாம் வேண்டியவற்றைத் தந் தலைவரிடத்துப் பெறு கின்றார்களெனின், உயிர்கள், தம்மினுமினிய தம் உயிர்த் தலைவ னாகிய பசுபதியை நோக்கி அழுதால் அவை வேண்டியவற்றை அவன் அளித்தருளுவா னென்பதில் ஐயம் யாதுளது?

இன்னும், நாம் ஒரு பொருளைப் பெறவிரும்பி யாரிடத்து அழுகின்றோமோ அவர் மக்கட் டலைவரா யிருப்பின், பேரரு ளுடைய ரல்ல ரவராகலின் நமக்கு இரங்கி அதனைக் கொடுத் தற்கு இசையார்; ஒரோவழிச் சிறிது இரக்க முடையவரா யிருந்து கொடுக்கக் கருதினும், அவர் எல்லாமுடையவ ரல்ல

ராகலின் அஃது அவரிட மிருத்தல் ஒருதலை யன்று; இல்லா விடினுந் தேடிக் கொடுக்குங் கருத்துடையரா யிருப்பின், முற்று முணர்ந்தவரல்ல ராகலின் அதனைப் பெறுதற்குரிய நெறியைப் பிழைபாடின்றி அறியும் ஆற்றலுடையவருமாகார்; ஒருவாறு பிழையின்றி உணர்ந்து முயலினும் என்பு, தோல், நரம்பு முதலியவற்றா லாக்கப்பட்ட உடம்புடையவராகலின் அம்முயற்சி காரணமாக உடல் நலங் குறையின் அதனைக் கைவிடுவர்; எங்ஙனமாயினும் அதனைப் பெறுதற்கு முடிவி லாற்ற லுடையவரு மல்லர்; இத்துணையுங் கடந்து ஓரோவழி அவர்க்கு அது கிடைப்பினும் வரம்பிலின்ப முடையவரல்ல ராகலின், தம்முயற்சியின் அருமையும் அப்பொருளின் பெருமையும் நோக்கித் தம்மின்ப நிறைவுக்கு அதனை ஆக்கிக் கோடலுங் கூடும்; அல்லது வாய்ப்பினும் வாய்க்கலாம். எனவே மக்கட் டலைவரிடம் நாம் அழுது வேண்டும் பொருள் நமக்கு வாய்த்தல் ஐயமே அன்றித் தேற்றமில்லை. அவர் கடவுட் டலைவரா யிருப்பின் பேரருளுடைமை, எல்லா முடைமை, முற்றுணர் வுடைமை, தூய உடலுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பிலின்ப முடைமை என்பன அவரிலக்கண மாதலின் அப்பொருளை நாம் அடைதல் முக்காலும் உறுதி யென்க.

இன்னும், ஓர் அரிய மகவின் அழுகையானது பொதுவாகத் தமிழுலகத்திற்குஞ் சிறப்பாகச் சைவ உலகிற்குஞ் செய்த நன்றியை இங்கு மறக்க வொண்ணுமோ! அன்றி மறைக்க வொல்லுமோ! இலை படர்ந்த பொய்கைக் கரையில் செம்மேனி வெண்ணீற்றான் திருத்தோணிச் சிகரத்தை நோக்கித் தம் புனிதவாய் திறந்து 'அம்மே அப்பா' என்றழைத்துக் கண்மலர்கள் நீர் ததும்பக் கைம்மலர்களாற் பிசைந்து, வண்ண மலர்ச் செங்கனிவாய் மணி யதரம் புடை துடிப்ப, வேத நெறி தழைத் தோங்கவும், மிகு சைவத் துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும் பொருமி அழாவிடின், நேயர்களே! நீறு எங்கே? மறை எங்கே? திருநெறித் தமிழ் எங்கே? திரு வைந்தெழுத்து எங்கே? இவை யாவும் நிலை பெறும் பொருட்டு இறைவனை நோக்கி விம்மி யழுத மகவு யார்? அறியீரோ!

அறியீராயின் நும்மைச் சைவர் என்று சாற்றுவது யாங்ஙனம்? அம்மகவு காழிக் கன்றன்றோ! கழுமலக் கண்ணன்றோ? வேணு புர வேந்தன்றோ! வெங்குரு வீரகன்றோ! புகலிப் புண்ணிய மன்றோ! புறவி னறவன்றோ! பூந்தராய்ப் புகழல்லவா! சிரபுரச் செம்மலல்லவா! சண்பைத் தவமல்லவா! கொச்சை வயக் குழ கல்லவா! பிரமபுரப் பிள்ளையல்லவா! தோணிபுரத் தோன்ற லல்லவா! இங்ஙனம் அழுது அம்மை யப்பரால் எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்து ஊட்டப்பெற்றதின் பயனாக,

"ஆறதேறுஞ் சடையா னருண்மேவ வவனியர்க்கு
வீறதேறுந் தமிழால் வழி கண்டவ"ராகிய திருஞான சம்பந்த ரென்னுஞ் சிறிய பெருந்தகையாரின் திருச் செயல்களை அறியாதவன் தமிழ் மகனாவானோ? அவரைப் போற்றாதவன் சைவனாவானோ? ஆகான்; ஆகான்; ஆகான்.

இங்ஙனம் தம்முடற் றந்தையையுந் தாயையும் நோக்கிப் பாலுக்குங் காட்சிப்பொருளுக்கும் அழப்பெறுங் குழவிப் பருவத்திலேயே உயிர்த் தந்தையாகிய இறைவனையும், இன் னுயிர்த் தாயாகிய இறைவியையும் ஒருநெறிய மனம் வைத்து நோக்கி, அழுது, அழைத்து உலகை வாழ்வித்தமையா லன்றோ, 'காலம்பெற அழுதார்' என்றும், 'விடையின்மேல் வருவார் தம்மை அழுதழைத்துக் கொண்டவர்' என்றும், 'அழுதுலகை வாழ்வித்தார்' என்றுஞ் சேக்கிழார் பெருந்தகையால் நமது ஆளுடைய பிள்ளையார் பாராட்டப் பெற்றார்?

இத்துணைச் சிறந்த அழுகையை இறைவன் திருவடிப் பேற்றுக்கு ஒரு சாதனமாகக் கருதினர் மணிவாசக அடிகள் என்பது,

"யானே பொய் யென்னெஞ்சும் பொய் யென்னன்பும் பொய்
ஆனால் வினையே னழுதா லுன்னைப் பெறலாமே"

என்னுந் திருவாசகத்தால் தெற்றென விளங்குகின்றது.

இனி, "'பெறலாமே" என்றதிலுள்ள 'ஏ'காரத்தை வினா வாக்கி அதனாற் போந்த பொருள் 'பெறலாகாது' என முடித்து,

'பொய் யன்புடைய யான் அழுவதனாற் பயன் யாது? அன்பற்ற அழுகையால் உன்னைப் பெற முடியாது' எனக் கொள்ளுவதே அடிகள் கருத்தாகும் எனக் கூறலாகாதோ" எனின், கூறலாம்; அங்ஙனங் கொள்ளினும் அடிகள் 'அன்போடு கூடிய அழுகையால் ஆண்டவனடியை அடையலாம்' எனக் கருதினாரென்றும், 'அன்பின்றி அழுகின்ற எற்கு எங்ஙனம் அத்திருவடிப் பேறு வாய்க்கும்' எனக் கருதினாரென்றுங் கொள்ளப்பட்டு, அடிப்பேற்றுக்கு அழுதல் ஒரு சாதன மென்பதும, அழுதனர் என்பதும் வலியுறுத்தப் படுவதால் முடிவில் வேறுபாடின்மை கூர்ந்துநோக்குவார்க்குப் புலனாகும். அவர், தம்மிடம் 'அன்பில்லை' எனக் கூறி யருளியதன் கருத்தை மேல்வரும் 'அன்பர்' என்பது பற்றிய ஆராய்ச்சியில் விளங்கக் காண்க.

இன்னும், "இறைவனை இறைஞ்சிக் கண்களில் நீருகுத்து அழுகின்ற அடியார்கட்கு அவன் அடிப்பேறு தப்பாது" என அடிகள் அறுதியிட் டுரைத்தமையைச் சென்னிப் பத்தில் 'புழுவினாற் பொதிந்திடு குரம்பையில்' என்று தொடங்குந் திருப்பாட்டில் 'தொழுத கையினராகித் தூய்மலர்க் கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு, வழுவிலா மலர்ச்சேவடி" என்பதனால் அறியலாகும்.

இவ்வழுதலாகிய சாதனமுந் தனக்கு வாய்க்கவில்லையே யென அடிகள் புடைபடக் கவன்றமை திருச்சதகத்திலுள்ள,

"ஆராயடியே னயலே மயல்கொண் டழுகேனே"
"அழுகே னின்பா லன்பா மனமாய்"

என்னும் அடிகளால் ஐயமற விளங்குமாறு காண்க.

இனி, அன்பர் அழுதமையைக் குறிக்கும் அழகிய ஆதரவு ஒன்று வருமாறு :—

"முழுமுதலே யைம்புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுதலே நின்பழவடியார் திரள்வான் குழுமிக்
கெழுமுதலே யருள்தந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமதுவே யன்றிமற் றென்செய்கேன் பொன்னம்பலத்தரசே"
(கோயின் மூத்த திருப்பதிகம், ௪.)

இத்திருவாசகத்தின் ஈற்றிலுள்ள 'என்னையு மென்னுடையனையும் ஒன்றுவிக்கும்' ஒரு வாசகமான 'அழுமதுவே யன்றி மற்றென் செய்கேன் பொன்னம்பலத்தரசே' என்பது, அறிவுடைய செல்வமகவு ஒன்று தன் உடற்றந்தையையுந் தாயையும் நோக்கி இடையறாது அழாநிற்க, அவ்வத்தனும் அம்மையும் அதனை வாரியெடுத்து மடிமீதிருத்தி 'எம் கண்ணே! ஏன் ஓயாது அழுகின்றாய்?' என்று கேட்பார்களாயின், அவ்வருமபொருள் "நீங்கள்தாம் யான் வேட்டதைத் தரவில்லையே, அழாமல் என் செய்வேன்?" என விடையளிப்பதைக் கண்கூடாகக் காணும் நமக்கு, நமது அடிகள், தம்முயிர்த் தந்தையாந் திருக்கூத்தனை நோக்கி இடையறாது அழாநிற்க, அதனை யறிந்த அவ்வம்பலத்தரசு பொறுக்கலாற்றாது, "அறிவுடைய அன்ப! எற்றுக்கு இடையறாது அழுகின்றாய்?" என வினவ, அதற்கு விடை போல நின்று நமது ஊனை யுருக்கி உணர்வைப் பெருக்குவதை உணர்மின்! இங்ஙனம் உள்ளத்தை உருக்கும் திருவாசகச் செழுந்தேனை நுகர்ந்து தேவுமால் கொள்ளாது, உலகியல் நறவு மாந்தி உழலு மக்களை யன்றோ அறிஞர் ஒரு மாத்திரை நீட்டி 'மாக்கள்' என்றதூஉ மென்க.

இன்னும், அவ்வாறு அழுங் குழந்தையை இருமுதுகுரவருந் தேற்றிக் கண்ணீரைத் துடைப்பது போல நமது அடிகள், தாம் அழுங்காலை இறைவன் தன் கண்ணீரைத் துடைத்துத் தேற்றினனென்பதைத் தமது அருமைத் திருவாக்காகிய "மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி மலங் கெடுத்த பெருந்துறை" என்பதனால் விளக்கி யிருப்பது நமது ஆருயிரைக் கொள்ளை கொண்டு ஆண்டவனடியின்கண் ஆராஅன்பினை அளிப்பதை அறிந்து அகங்குளிர்வோமாக.

இனி, மக்களிற் சிலர், தாம் வேண்டுவதொன்றைப் பெறுதற்கு ஒருவர் வீட்டு வாயிலில் நின்றுகொண்டு 'ஐயாவோ'—'அம்மாவோ' என இடையறாது கூப்பாடு போட்டு, தந்தகுதி கருதாது தாஞ்செய்யுந் துன்பத்திற் காற்றாது அவ்வீட்டார் அதனை அளிக்கப் பெற்றுக்கொள்ளுதலையும்; சிறுவர்கள் சிலர், வண்டிகளிலும் கால்நடையாகவுஞ் செல்லுவோரின் பின் ஓடி

யும், அவர் செல்லும் வழியினை மறித்தும் ஒன்றனைப் பெறு வதையும்; பன்னாள் வரையும் அகப்படாமல் எத்திக்கொண்டு திரியும் ஒருவர் அகப்பட்ட ஞான்று அவரை இறுகப் பிடித்துக்கொண்டு 'இனி நீ வலி செய்து போக வொட்டேன்' எனக் கூறித் தங் கருத்தைச் சிலர் நிறைவேற்றிக்கொள்வதையும் நாம் நினைவில் வைத்துக்கொண்டு முறையே,

"பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னா ளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப் பொழியானென் றெதிர்ப்படுமே"

என்னும் அப்பரருளிப் பாட்டையும்,

"வணங்கியாம் விடேங்களென்ன வந்துநின் றருளுதற்கு
இணங்கு கொங்கை மங்கைபாக வென்கொலோ நினைப்பதே"

என்னு மணிமொழியையும்,

"எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே"

"மூளைத்த வெண்பிறை மொய் சடை யுடையா
யெப்போது மென் னெஞ் சிடங்கொள்ள
வளைத்துக்கொண் டிருந்தேன் வலிசெய்து
போகவொட்டேன்"

என்னுந் திருவாசகச் செம்மொழியும் அப்ப ரருண்மொழியு மாகிய இவற்றையும், ("தொடுத்துங் கொள்ளாத மையலென்" எனக் குமணனைப் பெருந்தலைச் சாத்தனார் பாடியது இங்கு அறியத்தக்கது) நோக்குவோமாயின், "அழிதன் மாலையவாகிய பொருள்களைப் பெற மக்கள் மேற்கொள்ளும் வழிகளிற் சில வற்றை அழியாத பொருளைப் பெறுதற்கு அடியார்கள் மேற் கொளளுவ தியல்பு" என மேற்கூறியது வெள்ளிடைமலை யென விளங்குவதாகும்.

மேலே காட்டப்பட்ட திருவாசக ஆதாரவுகளினால் திருக் கூத்தனது செம்மலர் நோன்றாளைச் சேர்தற்கு அழுதல் ஒரு சிறந்த சாதன மென்பதூஉம், அதுதானும் தமக்குச் சித்திக்க வில்லையே யென அடிகள் புடைபடக் கவன்றா ரென்பதூஉம், அழுபவர்க்கு அடிப்பேறு தப்பா தென்பதூஉம், அதனை மேற்

கொண்டு அடிகள் ஒழுகினா ரென்பதூஉம் பிறவும் பெறப்பட்டமை காண்க.

## (2) அடி யடைந்தாரா?

அடியார்க ளனைவரும் இறைவன் திருவடிப் பேறு ஒன்றையே விரும்பி நின்று அதனையே அடைவா ரென்பது அவர்களின் உண்மை வரலாறுகளிற் காணப்படுவ தொன்றாகும். 'அடியார்' என்ற சொல்லின் பொருளும் அதனை அறிவுறுத்தல் அறிக. மேருவில்லான் திருவடிப் பேறுதான் வீடுபே றென்பது. இதனை அன்பர் திருவாசக யாத்திரைப் பத்தில்,

"போவோங் காலம் வந்தது காண் பொய்விட்
டுடையான் கழல் புகவே"

எனவும்,

"போமா றமைமின் பொய் நீக்கிப் புயங்க
ளாள்வான் பொன்னடிக்கே"

எனவும் கூறுமாற்றாலும், பிறாண்டும் அங்ஙனமே பேசுமாற்றாலும் அறிக.

இன்னும், திருநாவுக்கரசுகள், தாம் இறைவன் திருவடியுடன் இரண்டறக் கலக்கச் செல்லும் அந்நிலையிற் பாடியருளிய 'எண்ணுகேன்' என்று தொடங்குந் திருத்தாண்டகத்தின்கண்,

"புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்"

எனப் புகன்றருளியதுடன், அப்பதிகத்தின் ஈற்றடி முழுவதும் அங்ஙனமே அறைந்தருளினமையும் அறிக.

இன்னும், அப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாட்டின் இறுதியடியாகிய, "பொய் யுரைக்கா துன்னடிக்கே போதுகின்றேன்" என்பதும், 'பொய்விட் டுடையான் கழல் புகவே போவோம்' என மேலே காட்டிய மணிவாசகமும் ஒத்திருத்தலை ஓர்ந்து உளங்களிப்பதுடன், "வீடு பேற்றுக்குப் பெருந் தடையாக உள்ளது மக்களின் பொய்ம்மையே" என்பதையும் அறிந்து அதனை அகற்றி வாழ்வோமாக.

ஆளுடைய பிள்ளையாரும் திருவாழ்கொளிப்புத்தூர்த்

தக்கராகப் பதிகத்தின் ஈற்றடி முழுதும் 'அடி சேர்வோம்' எனக் கூறி இவ்வுண்மையை விளக்கி யருளினர்.

"திருவடியே சிவமாவது தேரிற்
றிருவடியே சிவலோகஞ் சிந்திக்கிற்
றிருவடியே செல்கதியது செப்பிற்
றிருவடியே தஞ்சமுட் டெளிவார்க்கே"

என்பது திருமந்திரம்.

"கடல்தாயின நஞ்சமுண்ட பிரான் கழல்சேர்தல் கண்டாய்
உடல்தா னுளபயன்"

என்பது சேரமான் பெருமானின் திருவாக்கு.

இன்னும், திருமுருகாற்றுப்படை 'சேவடி படரும்' என்ற விடத்து, "திருவடியே வீடாயிருக்கு மென்றார்; அது, 'தென்னன் பெருந்துறையான் காட்டாதன வெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்—தாட்டாமரை காட்டித் தன் கருணைத்தேன் காட்டி' என்பதனானும், பிறருந் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க" என்ற நச்சினார்க்கினிய ருரையும் இதனை வலியுறுத்தல் காண்க.

அவர் மேற்கோளாகக் காட்டிய திருப்பாட்டும் திருவாசக மென்பது கருதற்பாலது.

இனி, நமது அடிகள் 'சிவனெனு நாமந்தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்' திருவடிக்கண் வைத்த பற்று முதலிய வற்றையும், அதனை அடைந்ததையும் அவர் திருவாக்குக்களிற் கிடைக்கும் ஆதரவுகளைக் கொண்டே ஆய்ந்து காண்போமாக.

திருவாசகத் தொடக்கத்திலேயே, 'நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க' எனப் பெருமான் திருவடி பேசப்படுகின்றது. இங்ஙனம் தொடக்கத்திலேயே சிவபெருமான் திருவைந்தெழுத்தையும் திருவடியையும் அடிகள் வாழ்த்தி யருளியதன் நோக்கம் யாதாக இருக்கலாம் என்பதைச் சிறிது சிந்திப்போமாக.

வாதவூரடிகள், தாம் பிறவி யென்னும் பெருங்கடலில் வீழ்ந்து, துன்பமென்னும் பேரலைகளால் எற்றப்பட்டு, காரிகை

யாராகிய காற்றால் கலக்குண்டு, காமமென்னும் சுறா மீனின் வாய்ப்பட்டு, 'இனி யான் உய்வது யாங்ஙனம்' என ஏக்கமுற்ற காலை, அஞ்செழுத்தாகிய புணை கிட்டியதாகவும், அது கொண்டு ஆண்டவன் அருளடியாங் கரையை அடைந்து உய்ந்ததாகவும் 'தனியனேன்' என்று தொடங்குந் திருப்பாட்டால் விளக்குகின்றார்.

இங்ஙனம் திருவைந்தெழுத்தாகிய புணை தமக்குச் செய்த— காலத்தினாற் செய்ததும், செய்யாமற் செய்ததும், பயன் தூக்காது செய்ததுமாகிய—அவ்வுதவியானது ஞாலம், வானம், கடல் முதலிய அனைத்திலும் பெரிதாகத் தோன்ற, அதற்குக் கைம்மாறாகத் தாம் யாது செய்யலாமெனத் துருவித்துருவி ஆராய்ந்து "யானிதற்கிலனோர் கைம்மாறு" என்னும் முடிவிற்கு வந்து, நன்றி புரிந்தாரை வாழ்த்துதலாகிய நல்லோர் மரபுப்படி "நமச்சிவாய வாழ்க" எனக் கூறியருளினர்.

இனி, கடலின் நடுவட் கிடந்து கலங்குமொருவற்குப் புணை ஒன்று கிட்டி, கரை கிட்டா திருப்பின், அவன் அக்கடலில் மூழ்கி இறத்தலாகிய துன்பமட்டும் இல்லா திருக்கலாமே யன்றி, கரையை யடைதலாகிய இன்பத்தைப் பெறானன்றோ? ஆதலால் துன்ப நீக்கத்திற்குக் காரணமாயிருந்த திருவைந்தெழுத்தை முற்கூறிய நமது அடிகள் இன்ப ஆக்கத்திற்குக் காரணமாயிருந்த இறைவன் திருவடியை வாழ்த்துவான் வேண்டி "நாதன்றாள் வாழ்க" என வாய் மலர்ந்தருளினர். இன்னும் அதன் கீழ் வரும் பதினான்கு அடிகளில் அத்திருவடி "வாழ்க; வெல்க; போற்றி" எனக் கூறியருளியதையுங் காண்க. (தொடரும்.)

---

# சமய விளக்கம்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்]

(௬௨௭-ம் பக்கத் தொடர்ச்சி)

யானை கண்ட குருடர் கதையிலே, அறிஞர் யானையைச் சமயத்திற்கு ஒப்பிடுவர். குருடர் கண்ட உறுப்புக்கள் யானையின் பகுதிகளாக அடங்க, யானை உறுப்புக்களை யுடைய முத

லாக விளங்குதல் போல, பல சமயக் கொள்கைகளும் அவ்வவற் றிற்குரிய இடங்களில் உறுப்பாக அமையப் பெற்று விளங்கும் ஒரு சமயமே முழுச் சமயமா மென்பது போதருதலின்,

"ஓது சமயங்கள் பொருளுணரு
நூல்களொன்றோ டொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாது சமயம் பொருணூல் யாதிங்கென்னி
னிதுவாகு மதுவல்ல தெனும் பிணக்கதின்றி
நீதியினா லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசயம் பொருணூல்"

என்ற அருண்மொழி எழுந்ததென அறிக

எச்சமயத்தானும், தனக்கொத்த கருத்துக்கள் பிறிதொரு சமய நூலிற் காணப்படின், அவற்றைத் தழுவிக்கொள்ளுதல் முறை யென்பது,

"அன்னிய நூலின்விதி அவிரோதமேல்
உன்னேல் பழுதென் றுளத்து"

என்றமையா லறிக. கிறித்து மதத்திலும், மகம்மதிய மதத்தி லும் ஒருகடவுள் வழிபாடு கூறப்படுமிடத்து, அது சைவரால் தழுவப்படுதற் குரியதே. ஒருகடவுட் கோட்பாடில்லாத புத்த சமண சமயங்களினும் அவை அக்கொள்கை யளவிலே சிறப் புடையன வென்றே கொள்ளுதல் தக்கது.

நடையுடை பாவனைகளிலும் மொழியிலும் நாட்டிலுமுள்ள வேற்றுமை காரணமாக வெவ்வேறு நாட்டினர் ஒத்த கொள்கை களைப் போற்றாமை, இருட்டிலே தெலுங்கன் கைத்தோட்டி தமிழன் காதி லகப்பட்ட கதையை நினைவுறுத்துகின்றது. இருள் நிறைந்த ஓரிடத்திலே சென்ற ஒரு தெலுங்க வழிப்போக் கன் கையிலே இருந்த தோட்டியானது ஆண்டுச் சென்ற ஒரு தமிழன் காதி லகப்பட்டுக்கொண்டது. தெலுங்கன் தனது தோட்டியை யாரோ எடுத்துக் கொள்ளுவதாக நினைத்து என் னுடையது என்ற பொருளில் 'நாதி,' 'நாதி,' என்று கூவினன். தமிழன் தன் காதிலே மாட்டிக் கொண்டமை கூறுவான், 'காது, காது,' என்றலறினன். காது என்ற சொல், 'அன்று,'

என்று தெலுங்கிற் பொருள்படும். தெலுங்கன் தோட்டியைத் தன்னுடைய தன்றென்று தமிழன் கூறுவதாக வெண்ணி அதனை அழுத்தமாக இழுத்தான். வலி பொறுக்க முடியாத தமிழன், 'காது, காது,' என்று மீண்டு மலறினான். இக்கூக் குரல் கேட்டு, இருமொழியு மறிந்த ஒருவன் ஓடிச் சென்றுண் மை விளக்கினன். பின் இருவரும் தமது பிழையை யோர்ந் தனர். இவ்வாறே மேலை நாட்டினரும் கீழை நாட்டினரும், ஒரு வகையாரைப் பிறிதொரு வகையார் நன்கு அறிந்துகொள் ளாமையால், சமய முரண்பா டெய்துதல் கூடும். டாக்டர் போப், தமது திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பினால் மேலை நாட்டினர்க்கும் தமிழர்க்கும் தக்க கருத்தொற்றுமை விளைத் தலைத் தமது பெருநோக்கமாகக் குறித்துள்ளார்.

ஸோராஸ்டர் மத முதலிய சில அந்நிய நாட்டுச் சமயங்கள் சைவ சமயத்தோடு பெரும்பான்மை ஒத்த கருத்துக்க ளுடை யன. மேலை நாட்டுத் தத்துவ ஆராய்ச்சியாளர் சிலருடைய கொள்கைகள், சைவசித்தாந்த கொள்கைகளாகவே காணப்படு கின்றன. ஸர். ஜான் உட்ராவ் முதலிய அறிஞர், கீழை நாட்டுச் சமயங்களி னுண்மை யுணர்ந்து அதனையே தஞ்சமயமாகக் கடைப்பிடித்தமையுங் காண்க. விவேகானந்தரால் அமெரிக் காக் கண்டத்திற் பலர் இந்நாட்டுச் சமயக் கொள்கைகளைக் கைக்கொண்டமை போற்றற்பாலது. இதனால் தற்கால ஆராய் ச்சி முறைக்கேற்ப நமது சமயத்தை மேலை நாட்டினர்க்கு எடுத் துரைப்பின் இதனை அவர்கள் எளிதில் தழுவுதல் கூடுமென் பது பெறப்பட்டது.

இஃதிவ்வா றிருப்ப, உண்மையாக ஒற்றுமைப்படாத சமய நூல்களை ஒற்றுமைப் படுத்தும்பொருட்டுப் பொருள் கோண் முறை என்பதை ஒரு கருவியாகக் கொண்டு, நூல்கட் குப் பொருள் கூறுமுகத்தால், பல சமய நூலாசிரியரும் உரை யாசிரியரும் இந்நாட்டிலே சரித்திர வுணர்ச்சிக்கு ஊனம் விளைத் தனர். அஃது ஆராய்ச்சிக் குற்றமாகும். அது கம்பர் கல்லாதான் ஒருவனது கவிக்குப் பொருள் கூறிய முறையை யொக்கும். ஏழை யொருவன், கன்னா, பின்னா, காமா, சோமா என்று அர

சனை நோக்கிப் புலம்ப, கம்பர், கன்னு—கர்ணனே, பின்னு—பின்னைப் பிராட்டி கேள்வனே, காமா—மன்மதனே, சோமா—சந்திரனே யெனவும் பொருள்படு மென்றார். வடமொழியிலே உள்ள இருக்கு முதலிய வேத நூல்கட்குச் சைவசித்தாந்தப் பொருள் கூறுவார் முறை, மேற் கூறியதனே டொக்கும். சங்கராசாரியார், இராமானுஜர் முதலியோர் உபநிடதங்கட்குப் பொருள் கூறுமிடத்துத் தமது கருத்திற் கேற்ப, அவைகட்கு நலிந்து பொருள் கொண் டிடர்ப்படுதல் அவர்கள் பாடிய நூல்களுட் காணப்படுகின்றது. நூல்கட்கு இவ்வாறு பொருள் கொள்ளின், விவிலிய நூலுக்கும், மகம்மதிய வேதத்திற்கும் சித்தாந்த சைவப் பொருள் கோடலும் தக்கதே என்பது முடியும்; அது தக்கதன்று. ஒவ்வொரு நூலிற் கூறும் பொருளையும், நேராகக் கற்றறிதலே பொருத்தமானது. நெடுநாட்கு முற்பட்ட நூல்களை அவை யுண்டாய கால இயல்பினை யொட்டிப் பொருள் கொள்ளுதலே உண்மை யறிவதற் கேதுவாகும். புராணங்களிலும், பிற நூல்களிலும் ஒரே சொல் பல தெய்வங்களுக்கு வழங்குவதால் வருங் குழப்பம் அதிகம். அதனால் மக்கள் கலக்கமுறுதற்குக் காரணம் ஏற்படுகின்றது. உருத்திரன் என்ற சொல், திக்குப் பாலகருள் ஒருவர்க்கும், காலாக்கினி புவனத்துள்ளார்க்கும், சிவலோகத்துள்ளார்க்கும் பிரகிருதி முடிவிலுள்ளார்க்கும் வழங்கப்படுதல் காண்க. பிறவு மன்ன.

சமய நூலுணர்ச்சிக் குளதாம் தடைகளும் இடையூறுகளும் பலப்பல. இடைச் செருகல் முதலியவற்றாலும் பல தீங்குகள் விளைந்துள்ளன, ஆதலாற் சமயக் கொள்கைகளை யாயுமிடத்து, அவ்வச் சமயச் சிறப்புநூல்களின் தெளிவாய பொருளினையே கடைப்பிடித்தல் வேண்டும். இந்தக் கட்டுரையுள், ஒவ்வொரு சமயத்திற்குமுரிய, சமய நூல், கடவுளியல், ஒழுக்கவியல், பிரமாண நூல்கள், வழிபாட்டு முறைகள், சமுதாயத்தைப் பற்றிய நோக்கங்கள் முதலியவற்றை விரித்துப் பேச இடமில்லை. சமயக் கொள்கை, சமய வொழுக்கம் என்னு மிருபகுதியுள், சமயக்கொள்கை மாத்திர முடையோரே பெரும்பான்மையோ ராவர். சமய ஒழுக்கமும் உடன் உடையவர்

மிகச் சிலரே. சைவசித்தாந்தக் கொள்கை யுடைய பலர், உலகாயத வொழுக்க முடையராய்த் திகழ்கின்றார்கள்; சைவ சமயத்தாராய்ப் பிறந்தாருட் பலர், சைவ சமயக் கொள்கை யறியார். கொள்கை யறிந்தாருள்ளும் பலர் சமய ஒழுக்க மில்லாதவரே.

சில நூல்களைக் கடவுள் வாக்கென்று நம்பும் நம்பிக்கையும், அனையபிற நம்பிக்கைகளும், சமயக் கொள்கைகளின் முக்கிய பகுதியாக ஒரு சாரார் கருதுகின்றார்கள். சைவ சமயக் கொள்கைகள், இறை, உயிர், தளை, இவற்றினுண்மை, தன்மை தொடர்பு என்பவற்றைப் பற்றியும், அவற்றின், சார்பாய சரியை, கிரியை, யோகம், ஞானமென்ற ஒழுக்க முறைகளைப் பற்றியும் உள்ளவைகளே. இவற்றைக் கூறும் நூல்களைப் பிரமாண நூலாகக் கோடல் வேண்டப்படும். சமயத்தோடொட்டிய உடற் பாதுகாப்பு விதிகளையும், சமுதாய நலம் நாடும் விதிகளையும், காரணமில்லாத பல நம்பிக்கைகளையும், சமயத்தின் முக்கிய பகுதியெனக் கொண்டு, அவற்றை மேற்கொள்ளாமை, சமயத்தை மறுத்தலாகு மெனக் கழறுவதால் ஏற்படும் பிணக்குகள் பல. சமயத்தின் உயிர்க்கொள்கைகளையும் இன்றியமையாத ஒழுக்க முறைகளையுமே சிறப்பாகப் பாதுகாத்தல் வேண்டும். அவற்றைக் கைக்கொள்ளுவோர் எல்லாரும் சமயத்தினரே யென்ற உணர்ச்சி மேம்பட வேண்டும்.

சமயம் உயிரைப் பற்றியது, சாதி உடலைப் பற்றியதென ஓர்ந்து, சமயத்தினுண்மையும் நன்மையும் பலர்க்கும் கைவரும்படிச் செய்யவேண்டும். சாதிப் பிணக்கினாலும், சாதிப் பெருமைகளாலும், சமய வுரிமைகள் உரியார்க்குக் கிடைக்கப் பெறாமை நமது திருக்கோயில்கள் முதலிய பொது நிலயங்களிற் காணப்படும். சமயத்தின் திட்ப முணர்ந்தோர் அதனைச் சாதி மாசினாற் போழ்படாது பாதுகாப்பார். அது சமயத்தாரின் ஒரு தலையாய கடனாகும். இந்நாட்டின் சமய வரலாற்றினைச் சுருக்கமாகக் குறித்தல் தமிழ் மக்களுக் கியைந்த தொன்றாகலின், அது வருமாறு :—

கடவுள், உயிர், மெய், வினை, அறிவர் முதலிய சொற்களே தமிழரின் தத்துவக் கொள்கைகளின், தொன்மையுஞ் சிறப்பு முணர்த்துவதற்குப் போதுமானவை. ஞாயிறு, திங்கள், நெருப்பு என்னு மும்மண்டலங்களையும், கடவுளோ டியைத்துக் கூறு முறை தொல்காப்பியத்துட் பேசப்பட்டது. ஓங்காரம் தமிழெனு முடியவே, பிள்ளையார் வழிபாட்டின் அடிப்படை தமிழரைச் சார்ந்த தென்பது போதரும். முருகன் தமிழ்த் தெய்வமே. மாயோள், மாயோன் இருவருந் தமிழர் தெய்வங்களே. சிவனென்ற சொல் தமிழெனப் பிறவிடங்களில் விளக்கினமை கொண்டும், டாக்டர் கிரயர்சன் (Dr. Grierson) முதலிய மேலை நாட்டுப் புலவர் கூற்றானும் தெளிக. தமிழ் நாட்டுப் பிறதெய்வங்களைக் காலம், உலகமென்ற தொல்காப்பியச் சூத்திரத்துட் காண்க. இந்திரனுங்கூட இந்திய நாட்டிற் குரியவனே யெனத் திருவாளர் பி. டி. சீனிவாசய்யங்கார் முதலிய சரித்திர ஆசிரியர் கூறுவர். பிறவு மன்ன. சுருக்கமாக இயம்புங்கால், கதிரவன் வழிபாடு, சிவவழிபாடு, அம்மை வணக்கம், திருமால் பூசனை, முருகற் பராவுதல், பிள்ளையார்த் தொழுதல் ஆகிய எல்லாம் தமிழ் நாட்டிற்கு ஆதியில் உரியனவே. இவை ஆறும் ஓரே சமயத்தின் பகுதி யென்பது தந்திரத் தத்துவமென்னும் வடநூலுள் இவ்வறு சமயத்தாரும் அருவுருவச் சிவ வழிபாடியற்ற வேண்டுமென விதித்தமையி னறிக.

இனி, வரலாற்று முறையா ளைய்ந்தார் கருத்துப் பகர்வாம். ஒப்பெனிற் கொள்க, அன்றெனில் விடுக. தமிழ் நாட்டிற்குத் தெற்கேயுள்ள நிலப் பகுதியிலே மக்கள் வாழ்க்கை தொடங்கி 80,000 ஆண்டுகட்கு மேலாயின வென்ற கருத்து அறிஞரால் தெரிக்கப்படுகின்றது. ஸ்காட் எலியட் எழுதிய இழந்த லெமூரியா என்னும் நூலுள், கன்னியாகுமரிக்குத் தெற்கே கடல் கொண்ட நாட்டிலிருந்த பண்டை மக்கள் 12 அல்லது 15 அடி உயரமுள்ளவர்களா யிருந்தாரெனவும் பொன்மையுங் கருமையுங் கலந்த நிறமுடையவர்களாயும், தசைச் சுருட்டுப் போன்ற நெற்றியுடையராய், அந் நெற்றியிலே கண் படைத்தவருமா யிருந்தார்களெனவும் சில அறிஞர் ஊகிப்பதாக

வுரைத்தனர். நெற்றிக் கண்ணிற்குப் பதிலாகச் சிறு குப்பி போன்ற தசைத்திரள் (pineal gland) ஒன்று நமது தலையி லிருப்பதென்க.

கரிகால்வளவன் காலத்தில் முக்கண் படைத்த பிரதாப ருத்திரன் ஒருவ னிருந்தானென்ற கதை கேட்கப்படுகின்றது. முக்கண்ணுடையராய்த் திகழ்ந்த மக்கள், சமயவுணர்ச்சி யுடையராய்த் திகழ்ந்திருப்பின், இறைவனை முக்கண்ணினராக வழி படுதல் இயல்பே. மாடு கடவுளைப்பற்றி நினைக்கக்கூடுமாயின், தன்னினத்துட் பெரிய தொன்றாகவே அவரைக் கருதுமென விவேகானந்தர் தமது சொற்பொழி வொன்றிற் கூறியது காண்க.

முக்கண்ணுடைய மூர்த்தி சிவபெருமானென்பது யாரும் அறிந்ததே. சிவ வழிபாடு தமிழருடைய பண்டை வழிபாடென ரகோசின், ரப்சன், கிரயர்சன் முதலிய மேலை நாட்டாசிரியர்கள் ஆராய்ச்சியாற் புலனாகின்றது. சிவமென்ற சொல்லே தமிழ்ச் சொல்லென்பது (Dr. Grierson) என்பார் கருத்து. அவர் சொல்லுவதாவது:—

"சிவபெருமானுக்குப் புலித்தோலுடையும் நாக நகையும் பேசப்படுகின்றன. புலி கோறலும் நாகத்தைப் பிடித்தாட்டலும் மிக்க திறனுடையார்க்கே இயலும். வேட்டுவத் தொழில் மிக்க வாழ்க்கையில் சடையும் மரவுரியுந் தரித்து விலங்குகளையும் பாம்புகளையும் அடக்கவல்ல தலைவனே, தெய்வப் பேராற்றலுடையனாக இறந்த பின்னும் வழிபடற்பாலன். இயற்கைப் பேரொளி மண்டலமாகிய ஞாயிற்றை வழிபடாத பண்டை மக்களு முளரோ?"

குலத் தந்தையராய தலைவன் வழிபாடு நாளடைவிலே குல தெய்வ வழிபாடாகிப் பின் பெருந் தெய்வ வழிபாடாக மாறிற்றுப் போலும். கதிரவன் வழிபாடு முடன் கலந்து, கதிரவன் நிறம் சிவ முதல்வனுக்கும் ஏற்றப்பட்டது. கதிரவன் முதல்வனது இருக்கையாகவும் வடிவாகவும் கருதப்பட்டான். இளங் கதிரவன் வழிபாடு முருகன் வழிபாடாயிற்று. மலையில் வாழ்வார் யானையின்கண் தெய்வப் பேராற்றலைக் காணுத லியல்பே.

யானைமுகவன் வணக்கம் அறிவு மிகுதிப்பட்டகாலை ஓங்கார தெய்வ வழிபா டாயிற்று.

அச்சத்தோடு செய்யப்படும் தந்தை வணக்கமும் அன்போடு செய்யப்படுந் தாய் வழிபாடும் அம்மையப்பர் வழிபாடாய காலை, இறைவன் திருவடிவத்திலே ஒரு கை மழுவும், பிறிதொரு கை மானு முடையனவாயின. ஒரு புறம் அஞ்சேலென்ற வீரக் கரமும், எதிர்ப் பக்கம் வேண்டியனவற்றைக் குழந்தைகட் கீயும் அருட் கையும் அமைந்தனபோலும். அன்னையு மப்பனும் முன்னறிதெய்வம் என்றதுங் காண்க. தாயாகிய அம்மை வழிபாடே திருமால் வழிபாடாக மாறிற்றுப் போலும். காடுகளில் எங்கும் கொற்றவை, முதலிய அம்மை வழிபாடே வழக்கத்திற் காணப்படுகிறது. காட்டிலுள்ள பொழிலின் மரச் செறிவு கருநிறமாய்த் தெரிதலும், ஆண்டு வழிபடப்பட்ட தாயும் கருநிறத்தளாயினள். 'மாயோள் மேயகாடுறை யுலக' மென்ற பாடமே பழமையானது. முல்லைநில மக்கள் கண்ணன் ஆயரிடைப் பிறந்த காலந்தொட்டு மாயோன் வணக்கமுங் கைக்கொண்டனர் போலும்.

சிவவழிபாடே தமிழரது முழுமுதற் கடவுள் வழிபாடென்பது புறநானூறு, சிலப்பதிகாரம் முதலியவற்றின்கட் காணப்படுங் குறிப்புக்களால் விளங்கும்.

"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
நின்கொடை தாழும்"

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்"

"நுதல்விழி நாட்டத் திறையோன் கோட்டம்"

என்பன காண்க.

உயர்ந்த மலைகளில், நெருப்பு வழிபாடு சிறப்பாக நிகழும். கதிரவன் போலவே, நெருப்பும் இறை இருக்கை யென்று கொண்டகாலை, கந்தழி வழிபாடே பரம்பொருள் வணக்கமாயிற்று. 'ஆக்கி யளித் தழிக்குங் கந்தழியின் பேருருவே' என்ற இந்நிலையடியில், கந்தழி கடவுளைக் குறித்தல் காண்க.

"அருக்கனுவான் அரனுருவல்லனோ"

"எரி பெருக்குவ ரவ் வெரி யீசனது
உரு வருக்கம தாவ துணர்கிலார்"

எனவும் கூறியது காண்க. திங்கள் அம்மைவழிபாட்டிலே அடங்கிவிட்டது. திங்கள் அம்மையின் கலைகளி லடங்கு மென்பது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழிலே, 'கண்டு படுகுதலைப் பசுங்கிளி யிவட்கு ஒரு காலபேதமென்ன நின்னைக் கலைமறைகள் முறையிடுவ' என்றமையாலறிக. கொடிநிலை வள்ளி கந்தழியென்ற தொல்காப்பியச் சூத்திர வுரையில் திங்கள் பெண்டன்மை யுடையதென ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறியதுங் காண்க.

ஞாயிற்றினொளி உலகப் பொருள்களின் தோற்றத்திற் கேதுவாயதெனவும், திங்களினொளி அவற்றின் பாதுகாப்பிற் குரியதெனவும், நெருப்பு அவற்றை அழிப்பதெனவும் கருதப் பட்ட காலை,

சூரியமண்டலாதிபதயே பிரம்மணே நம
சந்திர மண்டலாதிபதயே விஷ்ணவே நம
அக்கினி மண்டலாதிபதயே ருத்ராய நம

என்ற மந்திரக் கருத்துக்கள் எழுந்தனபோலும். இம் மூன்று மண்டலத் தலைவரே மும்மூர்த்திகளாகக் கருதப்பட்டனர். ஈண்டுக் கூறிய மூவகை மண்டலமும் இறைவனதருள் வெளியி லடங்குவன. அருளே இறைவற் கிருக்கை யாதலினால் 'சக்தி மண்டலாதிபதயே ஈசுவராய நம' என்ற ஆகம வாக்கிய மெழுந்தது.

மும்மூர்த்திகளாயும் சத்தி சிவமாயும் நின்ற கடவுள் ஒருவனே யென்ற கருத்துப்பற்றி 'மூவராயு மிருவராயு முதல்வன் அவனேகாண்' என அருண்மொழி உதித்ததாகும். மும்மூர்த்திக் குத் தலைவனாயுள்ள பரம்பொருள் கடவுளென்ற கருத்துமது. 'படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திகளாயினை' என்றபடி மும்மூர்த்திகளை யதிட்டித்து முத்தொழில் புரிவா னிறைவனே யாதலின், அவர்களைக் கடவுளோ டியைத்துக் கூறும் மரபு ஏற்பட்டது. கொடிநிலை, வள்ளி, கந்தழி யென்ற சூத்திரக் கருத்துமஃதென்ப. இக் கருத்தே சைவ உபநிடதங்களிலும் பயில்கின்றது. முருகனைக் கடவுளாகவே கருதுவர். மூவரும் வணங்கும் பெருமா

னவனென்பது திருமுருகாற்றுப் படையுள்ளும், பரிபாடலின் கண்ணும் கூறப்பட்டது. திருமாலினை அம்மையாகவே கரு தினமையால் பரிபாடலுள் திருமாலுக்குப் பத்துப் பிறவி கூறப் படவில்லை. 'பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே' என்றது காண்க. இதனால் ஆதியிலே உள்ள சிவவழிபாடு, முருக வழி பாடு, உமை வழிபாடு, மால் வழிபாடு என்பன வெவ்வேறு தோற்றமுடைய ஒரு பெருமுதற் கடவுளது வழிபாடேயென் பது தெளியற்பாற்று. இவை பிற்காலத்தே பிரிவுற்று நமது நாட்டு மக்களுள் சமயப் பிணக்கிற்கேதுவாயின. மால்வழிபாடு மிக்க ஆரியக் கலப்புற்றுப் பண்டையுரு விழந்தமையால், சிவம், சத்தி, முருகன், கணபதி, என்போர் வழிபாடு ஒரு சம யத்தின் பகுதியா யடங்கி நிற்ப, மால் வழிபாடு மாத்திரம், அந்நிய சமயமாகத் தோன்றுதலாயிற்று. வரலாற்று முறை யை உற்று நோக்குவார்க்கும் அதுவும் தமிழர் பெருநெறியில் ஒரு பகுதியா யடங்க வேண்டுமென்பது தெற்றெனப் புலனும். அதற்காகச் செய்யு முயற்சி சிறக்க. கதிரவன் வழிபாடு சைவ, வைணவ மிரண்டினும் அங்கமாக அமைந்து போயினமையின் அதனைப்பற்றிய பிணக்கு யாதுமில்லை. சிவ சூரியன், சூரிய நாராயணனென்ற சொற்றொடர்களை உற்று நோக்குக.

தமிழ்நாட்டு இவ் அறு சமயங்களின் கருத்துக்கள் வட மொழி உபநிடதங்களிலும் பயில்வனவாயின. வடநாட்டுச் சம யங்களாகிய உலகாயதம், புத்தம், ஆருகதம், சாங்கியம், நியா யம், மீமாம்சகம் என்பன பின் எழுந்தன. இவற்றைப் புறச் சமயங்களெனத் திருமூலர் முதலியோர் கண்டித் தொதுக்கினர். இவற்றிற்கும் பின்னரே சைவசித்தாந்த சாத்திரங்களிற் கூறப் படும் புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமயம், அகச் சமயம் என நாற்கூற்று அறுவகைச் சமயப் பாகுபாடுகள் ஏற் பட்டனபோலும். இக்காலத்தே சமயங்களை ஒப்பிட்டு முறை யால் ஆராய்ச்சி செய்வார்கட்கு இவற்றோடு, கிறிஸ்து மதம், மகம்மதிய மதம், யூத மதம், ஸொராஸ்டிரியமதம், சூவி மதம், கன்பூஸியமதம் முதலியனவும், பிறவும் ஆராய்ச்சிக் குரியன வாகும்.

இதுகாறுங் கூறியவாற்றால் சமயமென்பது முதற்கண் உலகப்பயன் கருதி, மக்கள் தம்மிற் பெரியதாகக் கருதிய ஒன்றின் உதவியை வழிபாட்டு வாயிலாகப் பெற முயன்றகாலை எழுந்ததெனவும், அதற்கு இயற்கைப் பெருஞ்சுடர் வழிபாடு, இயற்கைச் சிறுபொருள் வழிபாடு, தென்புலத்தார் வழிபாடு முதலியன வாயில்களாயின வெனவும், பயன் கருதாது கடவுளினியல்பையு முண்மையையு மாராயப் புகுந்தார் தத்த மறிவிற் கெட்டியவாறு கண்ட உண்மைகள் சமயக் கொள்கைகளாய் வடிவெடுத்தகாலை சமயப் பிணக்குகள் ஏற்பட்டன வெனவும், நடுநிலையாய ஒப்பிட் டாராய்ச்சியாலும், படிப்படியாகச் செல்லும் சமய ஒழுக்கங்களாலும் உண்மைத் தெளிவு ஏற்படுதல் கூடுமெனவும், முரண்பாடான சமயவாதம் பயனற்றதெனவும், முழுத்தன்மையுடைய தொரு சமயம் எல்லாச் சமயத்தையும் இணக்கமான உறுப்புக்களாகக் கொள்ளுமென்றும், சமயங் கடந்த பெருநிலையுளதென்றும், சமயங்களை ஒற்றுமைப் படுத்துவதில், வரலாற்று முறைக்கு மாறுய பொருள்கோண் முறையாலும், பலபொருளொரு சொல் வழக்குகளாலும், சமயத்திற் குரியனவற்றைப் பிறவற்றோடு திரியக் கொண்டு மயங்கு மயக்கத்தாலு முளதாம் வழுக்களைக் களைதல் வேண்டு மென்றும் இயம்பப்பட்டது. பின்னர் நமது நாட்டிலே சைவ முதலிய ஆறு சமயங்கள் எழுந்த முறையைத் தமிழ்நூன் முறைக்கேற்ப ஆயுங்கால், கதிரவன் வழிபாடு, சிவ வழிபாடு, அம்மை வழிபாடு, மால்வழிபாடு, குமரன் வழிபாடு, யானைமுகவன் வழிபாடு என்பன தமிழ் நாட்டிற்குரிய ஒரு பெருஞ் சமயநெறியின் பகுதிகளாமென்பதும், ஞாயிறு, திங்கள், நெருப்பு இவற்றின் வணக்கமும் மூவர் வழிபாட்டிற் கடிப்படையான தென்பதும், அன்னோர் வழிபாட்டிற்கு மேலாகச் சத்தி சிவ வழிபாடுக ளுண்மையும் பிறவும் ஆயற்பாலன வென்பதும் புலனுதல் தெரிக்கப்பட்டது. பின்னர் நாளடைவிலே சமயப் பாகுபாட்டின் பெருக்க மெழுந்த முறையும் ஒப்பிட்டாராயத் தக்கன இவையெனவும் குறிக்கப்பட்டன.

---

# தமிழை வளர்ப்ப தெப்படி?

[திரு. D. N. ஆறுமுகம் பிள்ளையவர்கள்]

(சகக-ம் பக்கத் தொடர்ச்சி)

நூலாசிரியர்களே! எவர் எது கூறினும் கூறுக. நீவிர் பிற மொழிக் கலப்பில்லாத் தனித்தமிழ் நடையில் எழுதுமின்; எண்களெல்லாம் தமிழிலேயே குறித்திடுமின். சுக்கில ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபத்து மூன்றும் நாள் மதுரைத் தமிழ்க் கழகத்தின் இருபத்தெட்டாம் ஆண்டு விழாவில் தலைமை பூண்ட திருவாளர். சர். நார்மன் எட்வர்டு மார்ஷ்பாங்க்ஸ் என்னும் ஆங்கிலப் பெரியாருங் கூடத் தாம் நிகழ்த்திய விரிவுரையில் "தமிழில்........பிறமொழிச் சொற்களை இடையிடையே கலந்து பேசுவதை நோக்க என் மனம் வருந்துகின்றது" என்று கூறி யிருக்கின்றனர். இவருக்கிருக்கும் தமிழன்பு தமிழராகப் பிறந்த ஒரு சிலருக்கேனும் இருப்பின் "தமிழ் தனிமொழி யன்று" என்பார் வாய் அடைபடுமே.

இன்னும் தமிழ் வளர்ச்சியின் பொருட்டு நிலைநாட்டப் பெறும் கழகம் செய்ய வேண்டுவன பலவுள. அவற்றிற் சிலவற்றை மட்டும் கூறுகிறேன். நம் தமிழ்மக்களிற் பெரும்பாலார் தமிழ் நூல்கட்கு உரை கூறும் வன்மை யில்லாதவராகவே யிருக்கின்றன ரென்று முன்னரே கூறினேன். அது மட்டுமா? பிழையின்றி எழுதவும் அறிந்திலரே! இவர்களுக்குத் தமிழறி வுண்டாகுமாறு தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்கட்கும் பிற பழந்தமிழ் நூல்கட்கும் முன்னிருந்த உரையாசிரியர்கள் உரையைத் தழுவ வேண்டிய இடங்களிற் றழுவியும் மறுக்கவேண்டிய இடங்களின் மறுத்தும் தங்கள் நுண்ணறிவுக்குத் தோன்றிய பொருள்களை விளக்கியும் விளக்க வுரையெழுதி வெளியிடல் வேண்டும். நச்சினார்க்கினியர் பல விடங்களில் உரை யெழுது முறை பிற வுரையாசிரியர்க்குப் புதிய முறை. இவர் தம் உரையை விளக்க ஓர் பேராசிரியர் வேண்டும். முல்லைப் பாட்டுக்கும் பட்டினப் பாலைக்கும் நச்சினார்க்

கினியர் எழுதிய உரையையும் ஆசிரியர் மறைமலை யடிகள் எழுதிய உரையையும் வைத்து நோக்குவராயின் நச்சினார்க்கினியர் உரையின் போக்கு எத்தகைய தென்பது இனிது விளங்கும். இதுபற்றி மேலும் பேசுவேனாகில் பலர் உள்ளத்தே சினம் பொங்கி எழுமோவென அஞ்சுகிறேன். மேற்கூறிய நூல்களுக்கு ஆசிரியர் மறைமலை யடிகள் எழுதிய வுரையே போன்ற வுரைகள் பிற தமிழ் நூல்கட்கும் வெளியிடல் வேண்டும்; உரையில்லாத தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலிய நூல்கட்கும் தெளிவான விரிவுரைகள் எழுதவேண்டும்; சமய நூற் பொருளை எல்லாரும் எளிதின் உணர உரை நடை நூல்கள் பல எழுதி வெளியிடல் வேண்டும்.

தமிழ்மக்களிற் பல்லோர் தேவாரம் திருவாசகம் முதலிய நூல்கட்கு உரைகூறல் பிழையென எண்ணி யிருக்கின்றனர். திருவாசக விரிவுரை எழுதிய காலத்தில் ஆசிரியர் மறைமலை யடிகள் அறிவுச் சுடர்கொளுத்தி யிருக்கின்றனராயினும், இன்னமும் விரிவுரைகளானும் துண்டு வெளியீடுகளானும் இவர்கள் எண்ணத்தை மாற்றுதல் வேண்டும். திருவாசகத்துக்கு உரையெழுதல் வழுவாமெனக் கூறிய ஒரு பெரும்புலவர் தேவாரத்துக்கு உரைகூற நான் கேட்டதுண்டு.

தமிழ் மக்களாகப் பிறந்தும் தமிழின் அருமை யுணராமலும் தமிழின்பால் அன்பில்லாமலும் பலர் உளர்; இவர்கள் "தெலுகு தேட, அரவம் அத்வானம்" என்னும் தெலுங்கு பழமொழியைப் பலகாலும் பகர்கின்றனர்: "தமிழ், இறைவனைப் போற்றற் கேற்ற மொழியன்று; தமிழில் மந்திரங்கள் இல்லை; மணவினை பிணவினை முதலியன தமிழில் இயற்றல் கூடாது." என்கின்றனர். இவர்கள் எண்ணத்தை அடியோடு தொலைத்தற்கு இன்றே முயற்சித்தல் வேண்டும். தமிழின் பெருமையைப் பல வழிகளானும் இவர்கட்கு விளக்கல் வேண்டும். சிவபெருமான் திருக்கோயில்களினும் திருமால் திருக்கோயில்களினும் முறையே தேவார திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய தமிழ் மறைகளை ஓதுவித்தல் வேண்டும். இதற்கு அறநிலைப் பாதுகாப்பு மன்றத்தார் பெரிதும் உதவல் வேண்டும்.

*நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திர மென்ப.*

என்னும் அருமைத் திருமொழியைப் பல்காலும் ஓதி ஓதி நெட்டுருச் செய்த பல புலவர்களுங் கூடத் தமிழில் மநதிரம் இல்லையென்கின்றனரே! தனித் தமிழர் வழிபடு கடவுளான முருகப் பெருமானுக்குரிய ஆறெழுத் தருமறையுங்கூட இஞ்ஞான்று வடசொற்களான் வழங்கப் பெறுகின்றது; உலகினர் பலரும் "சரவணபவ" என்பதே ஆறெழுத் தருமறை என்கின்றனர். நச்சினார்க்கினியர் "நமக்குமாராய" என்றனர். தமிழ்க் கடவுண் மந்திரம் தமிழில் இல்லாம லிருக்குமா? சிறந்த மந்திரத்தை வடமொழியாளர் மகா வாக்கியம் என்பர்; இது பெரும் பெயர் என்னும் தமிழ்ச் சொல்லின் மொழி பெயர்ப்பே யாம். "பெரும் பெயர் எனினும் மகா வாக்கியம் எனினும் ஒரு வார்த்தை யெனினும் ஒக்கும்" என்ற சிவஞான முனிவர் திருமொழியே இதனை வலியுறுத்தும். ஐந்தெழுத் தருமறையைச் சைவ சமய நூல்கள் பல பெரும் பெயர் என்று பல விடங்களினும் முறையிடுகின்றன; எனவே பெரும் பெயர் என்பது சிறப்பு வாய்ந்த மந்திரங்களுக்குப் பண்டைக் காலத்து வழங்கப்பட்ட மொழியென்பது திண்ணம். பழந்தமிழ் நூல்கள் பலவற்றினும் பல இடங்களில் முருகன் என்னும் பெயர் பெரும்பெயர் என்னும் அடையடுத்தே வந்திருக்கிறது; இதனைக் கூர்ந்து நோக்கின், முருகப் பெருமானுக்குரிய மந்திரம் முருகன் என்னும் பெயருடன் மற்ருெர் தனித்தமிழ்ச் சொல்லும் கூடி ஆறெழுத் தருமறையாகித் தனித் தமிழிலேயே வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும் என்ப துறுதியாம். நம் ஆசிரியர் மறைமலையடிகளாரும் அறுகோணத்தில் அமைக்கும் முருகக் கடவுட்குரிய மந்திரமாக "முருக போற்றி" என்பதையே தமது மனித வசியம் என்னும் அரிய நூலில் எடுத்துக் காட்டி யிருக்கின்ருர். இவற்றை யெல்லாம் நினைந்து தமிழில் மந்திரங்கள் உளவென எல்லாருக்கும் எடுத்துக் காட்டல் வேண்டும்; மணவினை முதலிய செயல்களை யெல்லாம் தமிழ் மந்திரங்கள் கூறியே செய்தல் வேண்டும்.

தமிழ்ப் பெரும்புலவர் என்று பட்டஞ் சூட்டிக்கொண்டு தமிழாலேயே பிழைக்கின்ற சிலர் தமிழ் மொழிக்கே கேடு சூழ்கின்றனர். தனித் தமிழ் நூல்கள் பலவற்றையும் வடமொழியிலிருந்து வந்தன என்கின்றனர்; பல்லாயிர ஆண்டுகட்கு முன் தோன்றிய தமிழ் நூல்களையும் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னிருந்த தமிழரசர்களையும் பற்றி எழுதுங்கால் சில நூற்றாண்டுகட்கு முன்னர்த்தான் தோன்றியன என்றும் சில நூற்றாண்டுகட்கு முன்னர்த்தான் இருந்தனர் என்றும் எழுதி யிருக்கின்றனர். இவர்கள் உண்மையாகவே அறியாமையால் எழுதி யிருப்பின் அது குற்றமென்று யான் கூறேன்; மற்றுத் தமிழ் நூல்களின் தொன்மையையும் தமிழரசர்களின் தொன்மையையும் விளக்கினால் எங்கே தமிழுக்கும் தமிழர்க்கும் பெருமை வந்துவிடுமோ என அழுக்காறு கொண்டு கரவுடை நெஞ்சினராய் எழுதி யிருப்பின் அது குற்றமன்றோ? இவர்கள் பிறர் தம்மைத் தமிழின்பால் அன்புடையார் என நினைக்க வேண்டுமென்றும் தம் கரவு வெளிப்படாதிருக்க வேண்டுமென்றும் எண்ணி அதற்கேற்றவாறு உதடு பழஞ்சொரிய உள்ளே வயிறெரிய எழுதுகின்றன ராயினும், இவர்கள் எழுத்தை நடுநிலையாளர் உற்று நோக்கின் இவர் தம் தீய நினைவை எளிதின் உணர்ந்து கொள்வர். ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழியப் பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்த உதியஞ் சேரல் மாபாரத காலத்தவன் என்பது தெளிவாகத் தெரிந்தும் இவன் மகனாகிய இமயவரம்பனை அவற்குச் சில்லாயிர ஆண்டுகட்குப் பின்னரிருந்த சேரன் செங்குட்டுவற்குத் தந்தையென்ப தென்னையோ? எந்நூலேனும் சேரன் செங்குட்டுவன் தந்தை இமயவரம்பன் என்று கூறினதுண்டா? "குமரியொடு வடவிமயத் தொரு மொழிவைத் துலகாண்ட நெடுஞ்சேரலாதன்" என்பதனாலேயே செங்குட்டுவன் றந்தை இமய வரம்பனாகிவிடுவானா? இமய வரம்பன் என்னும் பெயர் ஒரு பொருள் பற்றி வந்ததேனும் அஃது அவற்கு இயற்பெயர் போலவே எல்லாரானும் போற்றப்பட்ட தென்பது பழந்தமிழ் நூல்களான் இனிது விளங்கும். கோவலனின் ஒன்பதாந் தலைமுறைப்

பாட்டனும் விடர்ச்சிலை பொறித்த வேந்தனும் நண்புடையோர் என்று மணிமேகலை கூறலான் அவனே செங்குட்டுவன் தந்தை யென்று கோடல் பொருந்துமா? முன்னோராற்றிய அரும்பெருஞ் செயலைப் பின்னோர்க்கும் ஏற்றிக் கூறல் பண்டைக்கால வழக்கு; (இவ்வழக்கு இஞ்ஞான்றும் உண்டு) ஆகையால், இஃது ஒன்றையே ஆதரவாகக்கொண்டு முடிவு கட்டல் பிழைபாடாம். புறநானூற்றில் தரும புத்திரனைப் பாடிய கோதமனார் என்னும் பெயரொடு பதிற்றுப் பத்தில் இமயவரம்பன் தம்பியைப் பாடிய பாலைக் கௌதமனார் என்னும் பெயர் ஒற்றுமையும், மாபாரதர் (பரத குலத்தார்—பாண்டவர்) என்னும் பெயரொடு பதிற்றுப்பத்தின் மூன்றும் பத்தின் இறுதிப் பதிகத்துள்ள நெடும்பாரதாயனார் என்னும் தொடர் மொழி யொற்றுமையும், பாண்டவர் காடுபோந்த வரலாற்றொடு இப்பதிகத்துள்ள "நெடும்பாரதாயனார் முந்துறக்காடு போந்த பல்யானைச் செல்கெழு குட்டுவன்" என்பதில் அடங்கியுள்ள வரலாற் றொற்றுமையும், இமயவரம்பனும் அவன் தம்பியும் பாரதப் போரிற் சோறளித்த உதியஞ் சேரலின் மக்கள் என்ற வரலாறும் ஆகிய இவையெல்லாம் மேற்கூறிய இரு வேந்தரும் (இமய வரம்பனும் அவன் தம்பியும்) மாபாரதவர் என்பதை உறுதிப்படுத்துவனவாம்; எனவே இவர்களைக் குறித்துப் பாடப்பெற்றுள்ள பதிற்றுப்பத்தின் இரண்டு பத்துக்களும் ஐயாயிர ஆண்டுகட்கு முற்பட்டன என்பதும் தேற்றம். எது எவ்வாறாயினும் ஆகுக; தமிழ்க்குக் கேடு சூழ்வார்தம் கரவினை எல்லார்க்கும் விளங்க வெளியிட்டு அவர்களைப் புலவரினத்தி லிருந்து நீக்கல் வேண்டும்.

பண்டைக் காலத்து வழங்கி இஞ்ஞான்று வழக்கு வீழ்ந்த பல சொற்களையும் துருவித் தங்கள் நுண்ணறிவையும், பழந் தமிழ் நூல்களையும், தமிழினின்று பிறமொழிச் சொற்களையும் துணையாகக் கொண்டு உண்மைப் பொருள் காணல் வேண்டும். சில சொற்களுக்குப் பொருளறியாமையால் தங்கையையோ மகளையோ மனைவி யாக்கிவிடுகின்றனர்; இருவரை ஒருவராக்கி விடுகின்றனர். பதிற்றுப்பத்தின் பதிகங்களைப் பாடிய ஆசிரி

யர் எல்லாப் பதிகத்தினும் அவ்வவ்வரசரின் மனைவியரை அவர்தம் தந்தை பெயரைக் கூறி இன்னார் மகள் (தேவி, வேண்மாள்) என்றே குறித்துள்ளார்; ஏழாம்பத்தின் இறுதிப் பதிகத்தின் மட்டும் அவ்வாறு கூறுமல் "அந்துவற் கொரு தந்தை யீன்ற மகள்" என்று கூறினர். ஏன் இவ்வாறு கூறினர்? வேறோரிடத்து இவள் தந்தை பெயரைக் கூறி யிருப்பாராகை யாற்றான் ஈண்டுக் கூறாது விடுத்தன ரென்று நினைக்க இடனுண்டு. இரண்டாம் பத்தின் பதிகத்தில் இமயவரம்பன் தந்தை தாய் பெயர் கூறினமையால் அவன் தம்பியைக் குறித்த மூன்றாம் பத்தின் பதிகத்தில் தந்தை தாய் பெயர் கூறாது விடுத்தமையே இதனை வலியுறுத்தும். இனி அந்துவன் என்ற சொல்லே துணையாகக் கொண்டு மேற்கூறப்பட்டவள் யாரென்பதை ஆராய்தல் வேண்டும். ஒன்பதாம் பத்தின் பதிகத்தில் "அந்துவஞ் செள்ளை" என்று ஒரு பெயர் காணப்படுகின்றது. செள்ளை யென்ற சொற்குப் பொருள் நிகண்டு அகராதிகளில் இல்லை. தெலுங்கில் செல்ல என்ற சொல் தங்கையைக் குறிக்கும் முறைப்பெயராக வழங்கப்படுகிறது. இப்பொருளே செள்ளை என்பதற்குப் பொருளாக இருத்தல் கூடும். எனவே, அந்துவஞ்செள்ளை என்பதற்கு அந்துவன் என்பானது தங்கை யென்பதே பொருள். ஒன்பதாம் பத்தி னிறுதிப் பதிகத்தில் "மையூர் கிழான் வேண்மா ளந்துவஞ் செள்ளை" என்று தந்தை பெயர் கூறலாற்றான் முதற்கட்கூறுமல் "அந்துவற்கொரு தந்தை யீன்ற மகள்" என்றனர். பொறையன் பெருந்தேவி இவளென்பது பதிகத்தால் விளங்கவும் இவளை மையூர் கிழான் மனைவி யென்றும் அந்துவஞ்சேரல் மனைவி யென்றும் கூறல் பெரிதும் பிழைபாடாம். இவள் அந்துவற்குத் தங்கை யென்றும் பொறையற்கு மனைவி யென்றும் விளங்கலான் "மையூர் கிழான் வேண்மாள்" என்பதற்கு மையூர் கிழான் மகளென்பதே பொருள். இனிச் செள்ளை யென்பதற்குப் பொருள் பெற்றே மாகலால், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்பார் காக்கை பாடினியாரின் தங்கையே என்பது திண்ணம் இதனைச் சிறுகாக்கை பாடினியார் என்ற பெயரும் வலியுறுத்

தும். இதை யுணரார் பலர். காக்கை பாடினியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் இரு பெயர்களும் ஒருவர்க்கே உரியன என்று கருதுகின்றனர். புலவர் பெருமக்களே! இன்னும் இவை போன்ற சொற்களுக்குப் பொருள் கண்டு ஆதரவுகளுடன் வெளியிடுவதுமன்றித் தமிழிலுள்ள பெரும்பாலான சொற்களுக்கும பகுதி யறிந்தெழுதி வெளியிடல் வேண்டும். மறைமலையடிகள் ஒரு நூலில் வேதம் என்னும் சொற்குப் பகுதியறிந்து விளக்கியிருப்பது கற்பதற்குப பெரிதும் இன்பம் பயக்கின்றது. (தொடரும்)

---

# ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர்

[பண்டிதை கண்ணம்மாள் அவர்கள்]

இந்திய மக்களிடையே மலிந்துள்ள சமூகக் கொடுமைகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் வேரோடு களைய முற்பட்டவர் பலர். அவர் தத்தம் காலத்தில் ஓரளவு சீர்த்திருத்தத் துறையில் பாடுபட்டு மறைந்தனர். அங்ஙனம் பாடுபட்ட பெரியாரில் இராஜாராம் மோகனராய் ஒருவர், ஈஸ்வர சந்திரர் மற்றொருவர். முன்னவர் உடன்கட்டை யேறும் வழக்கத்தினையும் அதனால் ஏற்படும் கொடுமையையுங் கண்டு, அரசாங்கத்தார் உதவியினைக்கொண்டு சட்ட மியற்றி, அவ்வழக்கத்தை அடியோடு ஒழித்தார். பின்னவர், விதவைப் பெண்கள் விதவை வாழ்க்கையினை விட்டு மறுமணம் புரிந்து இன்புற்றிருக்கலாமென அரசாங்கத்தாரால் சட்ட மியற்றிப் புகழ்பெற்றார். இவ்விரு பெருமக்களுக்கும் பெண்ணுலகம் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அப்பெரியார்களில் பின்னவரான ஈஸ்வர சந்திரரது இனிய வரலாற்றை ஈண்டுக் கூறுதும்.

ஈஸ்வர சந்திரர் அந்தணர். அவர் வங்காள மாகாணத்தில் ஹூக்ளி ஜில்லாவிலுள்ள வீர சிங்கம் என்ற கிராமத்தில் 1820-ம் வருடம் பிறந்தார். அவரது தந்தையார் அவ்வமயம் மாதம் பத்து ரூபாய்க்கு வேலை பார்த்து வந்தார். ஈஸ்வர சந்திரர் ஒன்பது வயது வரையில் தமது கிராமப் பள்ளியில் வங்க

பாஷையைக் கற்று வந்தார். பின்னர், தமது கிராமத்திற்கருகே யுள்ள கல்கத்தாவுக்குத் தினந்தோறும் நடந்து சென்று வட மொழிக் கல்லூரியில் படித்து வந்தார். முதல் வருடப் பரீட்சையில் முதல்வராகத் தேறியதால், அவர் உபகாரச் சம்பளம் கொடுக்கப் பெற்றார். நாளடைவில் அக்கல்லூரியில் வியாகரணம், தர்மம், வேதாந்தம், அலங்காரம், சோதிடம், தர்க்கம் முதலியன சம்பந்தமான சாத்திர நூல்களைக் கற்றுப் பரிசுகளும் பெற்றார். இவற்றோடு அமையாது, அக்காலத்து முனிசிப்புகளுக்கென நடைபெற்று வந்த பரீட்சையில் தமது பதினேழாம் வயதில் தேர்ச்சியுற்றார். அடுத்த ஆண்டு அரசாங்கத்தார் அவரை நியாயாதிபதியாக நியமித்தனர். ஆயினும் அவர் தந்தையார் சொற்படி அவ்வேலையை விட்டு, மீண்டும் கல்லூரியிற் சேர்ந்து பல்வேறு சாத்திரங்களைக் கற்றுத் தேர்ந்து, வியாசம் எழுதுவதிலும் செய்யுள் யாப்பதிலும் பரிசுகள் பெற்றார். இந்திய தர்ம சாஸ்திரப் பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சியுற்று **வித்தியா சாகரர்** (கல்விக் கடல்) என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்.

ஈஸ்வர சந்திரர், பட்டம் பெற்ற பின்னர் வடமொழிக் கல்லூரியில் இலக்கண போதகாசிரியராக அமர்ந்தார். பின்னர் 1840-ல் ஆங்கிலப் பாடசாலையில் வடமொழிப் பண்டிதராக வேலை பார்த்தார். அங்கிருக்கையில், அவர் போதிய அளவு ஆங்கிலங் கற்றார். 1850-ல் பண்டித வேலையை விட்டு வடமொழிப் பள்ளியொன்றில் தலைமை ஆசிரியராக வேலை பார்க்கலானார். அவரது கல்வித் திறத்தினைக் கண்டு மகிழ்ந்த அரசாங்கத்தார் 1885-ல் அவரை ஹூக்ளி, நந்தியா, பர்ட்வான் முதலிய ஜில்லாக்களுக்குப் பரீட்சாதிகாரியாக நியமித்தனர். அப்போது அவருக்கு மாதச் சம்பளம் 500 ரூபாய்.

ஈஸ்வர சந்திரர் தமது குன்றா உழைப்பால் தமது அதிகாரத்துக்கு உட்பட்ட ஜில்லாக்களில் பெண்பாடசாலைகளை ஏற்படுத்தினார். 'பெண்கள் படிக்கலாகாது' என்ற மூடக்கொள்கையிருந்த அக்காலத்தில் பல பாடசாலைகள் பெண்களுக்கென ஏற்படுத்தியது துணிகரச் செயல் அன்றோ? பெண்கள் முன்

னேற்றத்தில் எத்துணைப் பேரவாக் கொண்டிருப்பின், அப் பெரியார் அவ்வரிய செயலைச் செய்திருப்பர்! அப்பெரியாராற்றான் இந்திய நாட்டுப் பெண்ணுலகம் பெருமை பெற்றதென்றே கூறுதல் அமையும்.

இங்ஙனம் அவர் வேலை செய்து வருகையில், கல்வி இலாகா அதிகாரி கல்விக்காக ஈஸ்வர சந்திரர் செலவழிக்குந் தொகை அதிகமெனக் குறை கூறினர். இதனாலும் பிற காரணங்களாலும் அவர் தமது வேலையை இராஜினமா செய்துவிட்டார்.

ஈஸ்வர சந்திரர் கல்லூரிப் பண்டிதரா யிருக்கும்போதே **விட்டல பஞ்ச விம்சதி** என்ற வசன நூல் ஒன்றை வங்காளியில் எழுதி வெளியிட்டனர். அந்நூல், எளிய இனிய நடையையும் பொருட் பொருத்தமுடைய வார்த்தைகளையும் கொண்டு விளங்கினமையின், ஆசிரியர் பெயர் மாகாணமெங்கும் பரவியது. பின்னர், வடமொழியைச் சுலபமாகக் கற்கத்தக்க சாதனங்களைக் கண்டறிந்து சில நூல்களை எழுதினர். அந்நூல்கள் வடமொழி ஆசிரியர்க்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்பட்டன. நாட்டு மக்களுக்கும் நாட்டு மொழிக்கும் பாடுபடுவதே தாம் பிறவி எடுத்ததன் நோக்கம் என்றெண்ணிய அப்பெரியார் வங்காள மொழியில் தேச சரித்திரம் முதலிய பல திறப்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டார். சாகுந்தலம் முதலிய வடமொழி நாடகங்களையும் வங்க மொழியில் மொழி பெயர்த்தார். சொற்சுவையும் பொருட்சுவையும் ஒருங்கே யமையப்பெற்ற அவரது நூல்கள் நாடெங்கும் பரவின. பாடசாலை மாணவர் கற்கத்தக்க முறையில் நூல் பல எழுதி வெளியிட்டார். வங்காள மாகாணம் முழுவதும் அவரது புத்தகங்களே மிளிரலாயின. ஆதலின், அவர் மாதந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் பெற்றார். அவர் எழுதி உதவிய நூல்களில் நாட்டின் நன்மைக்கான பல புதிய கருத்துக்களையும் பெண் கல்வியின் அவசியத்தையும் ஆங்காங்கே செறிய வைத்துள்ளார். இங்ஙனம் அப் பெருந்தகையாளரது உழைப்பின் பயனால் வங்க நாட்டில் வடமொழியும் வங்காளியும் தத்தமக்கென பல நூல்களைப் பெற்றுச் சிறப்புறலாயின.

கல்விக்கு உழைத்த ஈஸ்வர சந்திரர் பல சீர்திருத்தங்களை யும் செய்யப் பிழைத்தா ரல்லர். கைம்பெண்கள் மறுமணம் புரியலாம் என்னும் சட்டத்தைக் கொணர்ந்துதவிய பெரியார் அவரே. அவர் பல சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்து விதவைகள் மறுமணம் செய்து கொள்ளல் சாஸ்திரத்துக்குச் சம்மதமே என்று பல ஆதாரங்களைக் காட்டி நூல் ஒன்றை வெளியிட்டார். அந்நூல் வெளிப்போந்ததே தாமதம். உடனே நாட்டில் பெருங்கிளர்ச்சி யுண்டாயிற்று. வைதிகப் பண்டிதர் பலர் அவரது நூலையும் கொள்கைகளையும் கண்டித்துப் பல நூல்களை எழுதி வெளியிட்டனர். கூட்டங்கள் கூட்டி அவரோடு வாதும் புரிந்தனர். எனினும் என்? கல்விக் கடலாய ஈஸ்வர சந்திரர் முன் வைதிகப் பண்டிதர்கள் எம்மாத்திரமாவர்? அவர் பல நியாயங்களைக் கூறி, மறுமணம் நியாயமானதே என்பதை நிலைநாட்டினார். என்றாலும், அவருடைய நண்பர் பலரும் எதிரிகளாயினர். ஆயினும், சுயமரியாதையுடைய ஈஸ்வர சந்திரர் அவர்களைப் பொருட்படுத்தாது தமது, கொள்கைகளைப் பத்திரிகைகள் வாயிலாக நாடெங்கும் பரப்பினார். அவரது தீவிர உழைப்பைக் கண்ட பெண் மக்கள் பலர் அவர் கருத்துக்களை ஆதரிக்க முன் வந்தனர். கற்றறிந்த பெரியோர் பலரும் அவருக்கு ஆதரவளித்தனர். அவரது இயக்கம் பலப்பட்டவுடன் மறுமணத்திற்கு ஆதரவான சட்டம் அரசாங்கத்தாரைக் கொண்டு இயற்ற விரும்பினார். அவரது முயற்சியின் பயனாக 1856-ல் கைம்பெண் மணம் (விதவா விவாகம்) புரிந்து கொண்டவர்க்குப் பிதுரார்ஜிதமான சொத்துக்களின் உரிமை நீங்காதென்னும் பொருட்பட்ட சட்டம் ஒன்று அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டது. இச்சட்டம் நிறைவேறாவாறு செய்ய முயன்று, வைதிகர், பாவம்! தோல்வியும் வெட்கமும் அடைந்தனர்.

சட்டம் இயற்றியதோ டமையாது, ஈஸ்வர சந்திரர் மாதர் மறுமணத்தைப் பற்றி நாடெங்கும் பிரசாரம் செய்துவந்தார். தமது குமாரனுக்கு ஒரு விதவையை மணமுடித்து வைத்தார். சொல்பவர் செய்கையில் நடந்து காட்டினால் அன்றோ மக்கள்

பின்பற்ற ஏதுவாகும் என்பதை ஈஸ்வர சந்திரர் நன்கு உணர்ந்தவர். விரைவில் தமது முயற்சியின் பயனாக அவர் பல மறுமணங்களை நடத்திவைத்தார். அவை யாவும் அவரது செலவிலேயே நடந்தன. மாதர் மறுமணம் என்பது சொல்லளவோடு நில்லாது, செயலிலும் புகுந்துவிட்டதை யறிந்த பலர் அவரை வெறுக்கத் தலைப்பட்டனர். அவரோடு பழகிய பெரியார் பலரும் விலகினர். அவரைக் குலத்திற்குப் புறம்பாக்கினர். என் செய்தும் என்? கருமமே கண்ணாயினார் இப்புன் செயல்களுக்கு அஞ்சுவரோ? அஞ்சா ரன்றே! நமது சுயமரியாதைப் பெரியார் அப் புன்மக்களைப் பொருட்படுத்தாது, தமது வேலையை மேன்மேலும் நடத்திவந்தார்; மாதர் இயக்கத்தைத் தோற்றுவித்தார்; ஜாதி வித்தியாசங்களைக் கண்டித்துப் பேசினார். அவரது குலத்தில் ஆடவன் பெற்றிருந்த கௌரவத்தைக் குலைத்து ஆணும் பெண்ணும், சம நிலையில் இருக்கத் தக்கவர் என்னும் உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டினார். வரதட்சணை என்னும் கொடிய பேயைத் தமது சமூகத்திலிருந்து ஓட்டப் பாடுபட்டார். பெண்களுக்குச் சிறு வயதில் மணம் செய்விப்பதைக் கண்டித்தார். அதனைச் செயலில் காட்டத் தமது பெண்களுக்கு வயது வந்த பின்னரே திருமணம் செய்துவைத்தார். பெண்கள் பொருட்டு அப்பெரியார் செய்த தியாகத்தை என்னென்பது! அவர் போன்ற மற்றோர் ஈஸ்வர சந்திரரை இந்தியத் தாய் என்று பெறுவாள்?

சுயமரியாதையும் சீர்திருத்த நோக்கமும் உடைய ஈஸ்வர சந்திரர் கருணையே உருவென வந்தவர் என்னலாம். பிறர் துயரங் காணச் சகியா அண்ணல் அவர். அப்பெரியார் அறவிலை வணிகர் அல்லர். தம் உள்ளத் தெழுந்த அன்பின் பெருக்கால் அறம் பல புரிந்தார். மன்னுயிர்த் தொண்டே இறைவன் தொண்டினும் சிறந்தது என்ற மனப்பான்மை யுடையவர். பல ஏழைக் குடும்பங்கட்குப் பொருள் உதவி செய்த புண்ணியர். தமது கிராமத்து ஏழைக் குழந்தைகள் இலவசமாகக் கல்வி கற்கப் பாடசாலை யொன்றை ஏற்படுத்தினார். தர்ம வைத்தியசாலை யொன்றையும் திறந்து வைத்தார். அவர் தமது கிராமத்துக்

குச் செல்லும்போதெல்லாம் துணிகளை வாங்கிச்சென்று அங்கிருந்த ஏழை மக்களுக்குக் கொடுத்துதவினராம். என்னே இம் மகானது கருணை! அவர் செய்த எண்ணிறந்த அறச்செயல்களில் நமக்குத் தெரிந்தன சில, தெரியாதன பல. வலக்கை புரியும் அறச்செயலை இடக்கை அறியலாகாதென்னும் கொள்கையுடைய அப்பெரியார் செய்தன எவையென்றுதாம் கூற இயலும்?

ஈஸ்வர சந்திரரது குன்றாப் புகழையும், கல்வியின் ஆழத்தையும் ஒழுக்க மேம்பாட்டையும் நன்குணர்ந்த அரசாங்கத்தார் 1890-ல் அவருக்கு ஸி. ஐ. இ. (C. I. E.) என்ற பட்டத்தை யளித்துக் கௌரவப்படுத்தினர். ஏழை மக்களோடு ஏழை மகனாய் எளிய வாழ்க்கையை நடத்தி, அடக்கமே அணிகலனாகக் கொண்ட ஈஸ்வர சந்திரர்—பெண்களின் இரக்ஷகர்—தேசப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட பெருந்தகையாளர்—1891-ம் ஆண்டு ஜூலை 29-ம் தேதியன்று கல்கத்தாவில் தமது பூதவுடலை நீத்துப் புகழுடம்பைப் பெற்றார். இத்தகையதோர் உண்மை யூழியரைப் பயந்த பாரதமாதா பேறு செய்தவளே யன்றோ?

---

# தொல்காப்பியச் சூத்திரக் குறிப்புரை

[வித்துவான். திரு. G. தேவநேசன் அவர்கள்]

தொல்காப்பியர் அகத்தியர் மாணவரேனும் தொல்காப்பியத்திற்கும் அகத்தியத்திற்கும் பெரிதும் வேறுபா டுண்டு. மக்களுக்கு அறிவும் ஆற்றலும் ஆயுளும் மிக்கிருந்த அகத்தியர் காலத்து நூல்களில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட பல இலக்கணங்கள், அவை குறைந்த தொல்காப்பியர் காலத்தில் விரிவாகக் கூறப்பட வேண்டியவாயின. அதற்கென்றே தொல்காப்பியர்,

"தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்

*செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு*
*முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி"*

வேண்டியதாயிற்று. அல்லாக்கால் அகத்தியமுள்ளிட்ட முந்நூலாராய்ச்சியே அமைந்திருக்கும். இதுபோதுள்ள இலக்கண நூல்கள் எல்லாவற்றுள்ளும் தொல்காப்பியம் முழுமதி போன்ற ஒரு தனிச் சிறப்பினதேனும் அதனிடத்துள்ள களங்கங்களையும் 'உண்மை யுரைத்தல்' என்னுமோர் மதம்பற்றி ஈண் டெடுத்துக் கூறுதல் இழுக்காகாது. இஃதோர் அடக்க வழுவமைதி யென்றே கொள்க.

குறிப்புகள் வருமாறு:—

1. *"சகரக்கிளவியும் அவற்றோ ரற்றே*
*அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே"*
(தொல்-எழு-மொழி-சூ 29.

*"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி*
*சளிசகடு சட்டை சவளி—சவிசரடு*
*சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்*
*வந்தனவாற் சம்முதலும் வை"*

என்பது நன்னூல் மயிலைநாதர் உரை மேற்கோள்.
(நன்-எழு-சூ 51.)

தமிழில் இதுபோதுள்ள சகர முதற்சொற்கள் நூற்றுக்கு மேற்படுகின்றன. சொற்களெல்லாம் ஆதியிலேயே அமைந்துள்ளன. ஒலிக்குறிப்புச் சொற்களும் பிறகுறிப்புச் சொற்களுமே புதிது புதிதாய்த் தோன்றுவனவாம். சங்கிலி, சந்தம், சலி, சடுதி, துப்பாக்கி, குடாக்கு, கிண்கிணி, சதங்கை, மிருதங்கம் போல்வன ஒலிக் குறிப்புச் சொற்கள். (Onomatopœia). சடை, சருச்சரை, சப்பாணி, பச்சை, மதர்ப்பு, மெத்தை முதலியன பிற குறிப்புச் சொற்கள். ஆங்கிலத்தில் சொற்கள் புதிது புதிதாய்த் தோன்றுகின்றனவே யெனின், அவை பிற மொழிகளினின்றும் கடன் கொண்ட திசைச் சொற்களே யன்றிப் புதுச் சொற்களாகாவென மறுக்க. ஒருசார் திரிசொற்களும் (Derivatives) புதிதாய்த் திரிக்கப்படுவனவாம். சட்டி,

சக்கை, சண்டை, சதை, சப்பு, சமை, சரி, சற்று முதலிய செந்தமிழ்ப் பழஞ் சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் தமிழி லில்லை யென்று சொல்லுதல் எள்ளளவும் பொருந்தாதென்பது அவற்றின் பொருளை ஆராய்வார்க்கு எளிதிற் புலனாகும்.

2. " குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் "
(தொல்-எழு-மொழி-சூ. 34.)

என ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வாறு குற்றிய லுகரம் மொழிக்கு முதலாம் என்றாராலோ வெனின்,

" நுந்தையுகரங் குறுகி மொழி முதற்கண்
வந்ததெனி னுயிர்மெய் யாமனைத்துஞ்—சந்திக்
குயிர்முதலா வந்தணையு மெய்ப்புணர்ச்சி யின்றி
மயலணையு மென்றதனை மாற்று "

இதை விரித்துரைத்து விதியும் அறிந்துகொள்க" என்பது நன்னூல் மயிலைநாத ருரை.
(நன்-எழுத்-சூ. 51.)

3. " மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃதென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன "
(தொல்-சொல்-எழு-மொழி சூ. 49.)

என்று எகின், செகின், எயின், வயின், குயின், அழன், புழன், புலான், கடான் என வரும் ஒன்பதும் மயங்காதனவெனக் கொள்ளின், பலியன், வலியன், வயான், கயான், அலவன், கலவன், கலுழன், மறையன், செகிலன் முதலாயின மயங்கப் பெறுமென மறுக்க" என்பது நன்னூல் மயிலைநாத ருரை
(நன்-எழு-சூ. 67)

4. " ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்த பகரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகரம் ஆகும் "
(தொல்-எழு-குற்-சூ. 40.)

ஒன்பதிற்கு முதலாவது வழங்கின பெயர் தொண்டு என்பது. தொண்டு+பத்து=தொண்பது—தொன்பது—ஒன்பது ஒன்பது=90 எழுபது எண்பது ஒன்பது என்று ஒப்பு நோக்குக.

தொண்டு+நூறு=தொண்ணூறு=900. எழுநூறு, எண்ணூறு, தொண்ணூறு என்று ஒப்பு நோக்குக.

தொண்டு+ஆயிரம்=தொள்ளாயிரம்=9000. ஏழாயிரம், எண்ணாயிரம், தொள்ளாயிரம் என்று ஒப்பு நோக்குக.

தொண்டு என்னும் பெயர் எங்ஙனமோ தொல்காப்பியர் காலத்தில் உலக வழக்கற்றது. ஆயினும் செய்யுள் வழக்கிலிருந்தது. தொல்காப்பியரே தம் நூலில் தொடைத் தொகை கூறுமிடத்து,

"மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
ஐயீராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்
றொன்பஃதென்ப உணர்ந்திசி னோரே"

(செய்—சூ. 101.)

என்று கூறியுள்ளார்.

தொண்டு என்னும் ஒன்றும் தானப் பெயர் மறையவே பத்தாம் தானப் பெயர் ஒன்றும் தானத்திற்கும் நூறும் தானப் பெயர் பத்தாம் தானத்திற்கும், ஆயிரத்தாம் தானப் பெயர் நூறும் தானத்திற்கும் கீழிறங்கி வழங்கத் தலைப்பட்டன. பின்பு ஆயிரத்தாம் தானத்திற்கு ஒன்பதாயிரம் என்ன வேண்டியதாயிற்று. சொற்படி பார்ப்பின் ஒன்பதினாயிரம் 90×1000=90000 ஆகும்.

ஒன்று முதல் பத்து வரை ஏனை யெண்ணுப் பெயர்களெல்லாம் தனி மொழிகளாகவும் ஒன்பது மட்டும் தொடர் மொழியாயு மிருத்தல் காண்க. தொன்பது என்னும் பெயரே முதன்மெய் நீங்கி ஒன்பது என வழங்கும். தெலுங்கில் முதன் மெய் நீங்காது தொனுமிதி எனவே வழங்குகின்றது.

(தொடரும்)

# தாமஸ் எடிசன் மாண்டார்

உலகத்திலே விஞ்ஞானக் கலையில் பேர் ஆராய்ச்சியாளராய் விளங்கி, மின்சார விளக்கு, தந்தி, டெலிபோன், கிராமபோன், மின்சார ரயில், சினிமா முதலிய ஆயிரக் கணக்கான புதுமைகளைக் கண்டுபிடித்து உலகத்துக்குப் பேருதவி புரிந்த தாமஸ் ஆல்வா எடிசன் அமெரிக்காவில் 18-10-31 ஞாயிற்றுக் கிழமை காலை 3-34 மணிக்குத் தமது பருவுடல் நீக்கிப் புகழுடம்பில் விண்ணுல கெய்தினர் என்ற செய்தி கேட்டு உலகமெல்லாம் பெரிதுந் துன்புற்றது.

## இவரது வாழ்க்கைக் குறிப்புகள்

18-10-31-ல் காலஞ் சென்றுவிட்ட திரு. தாமஸ் ஆல்வா எடிசன் என்பாருடைய வாழ்க்கையின் முக்கியமான குறிப்புகளைப் பற்றி அவருடன் நெருங்கிப் பழகிய திரு. ஆர்தர் பிரிஸ்பேன் என்பார் ஒரு சிறந்த கட்டுரை எழுதி யிருக்கிறார். இது, மேற்படிப் பெரியார் இறக்குந் தறுவாயி லிருக்கையில் எழுதியதாகும். இதன் சாரம் வருமாறு :—

திரு. எடிசனது உயிர் சீக்கிரத்தில் போய்விடுமென்று அவருடைய மருத்துவர்கள் கருதுகிறார்கள். அவர் உடல் வலிமை குன்றிக்கொண்டு வருகிறது. அதனுடன் அவர் உலகத்திடையே கொண்ட ஊக்கமும் குறைந்துவிடும். பல்லாண்டுகளுக்கு முன்னர் திரு. எடிசன் இங்கிலாந்துக்கு வந்திருந்தபோது அவரை அன்புடன் வரவேற்ற இங்கிலீஷ்காரர்கள் எப்பொழுதும் அதை மறக்கமாட்டார்கள். இந்தச் சமயத்தில் அமெரிக்கர்களுடைய எண்ணங்களெல்லாம் எடிசனிடத்திலேயே இருக்கின்றன. எடிசனது வாழ்க்கை முழுவதும் பொது நன்மைக்காகவே செலவழிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. இவருடைய ஆராய்ச்சியினுல் உலகத்திற்கு உண்டாயிருக்கும் நன்மைகள் பல. அமெரிக்கப் பெரியார்களில் லின்கனுக்கு அடுத்த பதவியை எடிசன் வகிக்கிறார். லின்கனே, வாஷிங்டனுக்கு அடுத்தபடியான நிலையை வகித்திருந்தார். வாஷிங்டன்,

தமது நாட்டுக்குச் சுதந்திரத்தைச் சம்பாதித்துக் கொடுத்தார். லின்கன் தமது நாட்டின் ஐக்கியத்தை நிலைநிறுத்தினார். எடிசனே, தமது நாட்டிற்கு வெளிச்சத்தை அளித்தார்; கைத்தொழில் வளத்தையும் அளவற்ற நிதியையும் அளித்தார்.

* * *

'இருட்டை ஓட்ட மின்சார விளக்கு எங்கும் எரியட்டும்' என்று எடிசன் கருதினார். அப்படியே உண்டாயிற்று. எல்லாக் காரியங்களுக்குஞ் "சப்ளை" செய்யக் கூடியவாறு மின்சார உற்பத்தி நிலயங்களை நிலைநிறுத்தியவர் எடிசனே யாவார். இது தவிர, டெலிபோன், கிராமபோன், பயாஸ்கோப் முதலிய அனைத்தையும் எடிசனே கண்டுபிடித்தார். எடிசன், மின்சார உபயோகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து வெளியிடுவதற்கு முன்னர், மின்சாரம் என்பது விளக்கேற்றக் கூடிய ஒரு சக்தி என்று மட்டும் சிலருக்குத் தெரிந்திருந்தது. அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் மட்டும் இந்த மின்சாரத் தொழிலில் இப்போது எட்டு லட்சம் பேர் வேலை செய்கின்றனர். இவர்கள் பெறும் சம்பளம் வருஷத்தில் 200,000,000 பவுனாகிறது. இவர்கள் உத்தியோகத்திற்கும், பெறும் ஊதியத்திற்கும் எடிசனே காரணராவர்.

* * *

எடிசனுக்குக் காது செவிடு. தமது செவிப்புலன் மந்தமாயிருப்பது, தமக்குப் பல விதங்களில் அநுகூலமா யிருப்பதாக அவர் கூறுவார். ஏனெனின் பிறருடைய வார்த்தைகளைக் கேளாமல், தமது மனோ உலகில் நிம்மதியாகச் சஞ்சரிப்பதற்கு இது பெரிதும் அநுகூலமா யிருந்தது. எடிசனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மெஷினை, ருஷ்யாவிலிருந்த டால்ஸ்டாயின் உபயோகத்திற்கு நான் அனுப்பினேன். அதை யறிந்த திரு. எடிசன் ஒரு பொற்றட்டில் தமது பெயரையும் பொறித்து அதனுடன் அனுப்பினார். அதற்குப் பதிலாக டால்ஸ்டாய் எழுதியிருந்த ஒரு கடிதத்தில், தம்முடைய எழுபதாவது வயதில், மிகுந்த குறைவான சிரமத்துடன், இந்த மெஷினின் உதவி

யைக் கொண்டு எழுத முடிவதைக் கண்டு தாம் பெருமை பாராட்டிக் கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். எடிசன் தமது ஆராய்ச்சிக்கு வேண்டிய பணம் பெறுவதோடு நின்று விட்டாரன்றி, அதிக பணம் குவிக்கவேண்டு மென்று அவர் ஆசைப்படவே யில்லை. உலகத்தில் மிகப் பெரிய பணக்கார ரென்று கருதப்படும் ஸ்ரீமான் ஹென்ரி போர்ட் என்பார், எடிச னின் முக்கிய நண்பரா யிருந்தார். எடிசன் கண்டுபிடித்த கருவிகளையும், அவர் உழைத்த ஆராய்ச்சிச் சாலையையும் ஒருங்கு சேர்த்து ஓரிடத்தில் பொருட்காட்சிச் சாலையாக ஸ்ரீமான் போர்ட் வைத்திருக்கிறார். எஃகைத் தூளாக்கி அதைத் தண்ணீரில் மிதக்கக்கூடிய வகையில் எடிசன் ஒரு கருவியைக் கண்டுபிடித்தாரென்றும், இதற்குப் பன்னிரண்டா யிரம் பவுன் செலவாயிற்றென்றும், தமக்கென்று ஒன்றும், எடிசனுக்காக ஒன்றும் ஆக இரண்டு மெஷீஷன்களைத் தாம் வாங் கியதாகவும் ஸ்ரீமான் ஹென்ரி போர்ட் கூறினார். எடிசனிடத் தில் வேறு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும், நிரம்பிய ஆராய்ச்சி வன்மையும் திடமான மனோ சக்தியும் பூரணமாக இருந்தன. தமது ஆராய்ச்சிகளை நடைமுறையில் கொணர இவர் சிறந்த ஆற்றல் வாய்ந்தவரா யிருந்தார். இவர் சிறு பைய னாக இருந்த போது, தந்தி அடிக்கும் தொழில் செய்துகொண் டிருந்த போது, "ஒரே தந்தியில் ஏன் இரண்டு செய்திகளை அனுப்பக் கூடாது" என்று யோசித்து, அதைக் கொண்டு ஆராய்ச்சிசெய்து வெற்றி பெற்றார். இலக்ஷக் கணக்கான தொழி லாளர்கள், மாணாக்கர்கள் முதலியோர் இவருடைய ஆராய்ச்சி யால் நன்மை யடைந்திருக்கிறார்கள் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. எந்த உலகத்திற்கு வெளிச்சத்தைத் தந்தா ரோ, அந்த உலகத்தினின்று பிரிந்து, அகண்ட வெளிச்சமா யுள்ள உலகத்திற்கு அவர் செல்கிறார்.

---